பக்கங்கள்: 16
விலை:20 ரூபா
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 20 | சனிக்கிழமை 06.10.2018 | கதிர் 334

இது ரகசியம் அல்ல!

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை ஆட்சிப் பீடத்துக்குத் தொல்லை கொடுத்து வந்தது அமெரிக்கா.
இலங்கையின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் விதத்தில் அங்கு நிறைவேற்றப்பட்ட எல்லாத்

பக்கம் 03 »

# ரணிலின் தலை மீண்டும் குறி!

## பதவி நீக்கும் யோசனை மைத்திரியிடமே நேரில் கையளிப்பு
## அதாவுல்லா, தொண்டமான், தினேஷ் உள்ளிட்டோர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 06
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஏதேனுமொரு வழியில் பதவி நீக்கம்செய்துவிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தலைமையில் ஆட்சியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தேசிய காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற முக்கியத்துவம்மிக்க கூட்டத்திலேயே மேற்படி யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

பக்கம் 14 »

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குங்கள்!
## அரசை வலியுறுத்தி முல்லைத்தீவில் கோஷம்



முல்லைத்தீவு, ஒக். 06
சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கக்

பக்கம் 14 »

# தீர்வில்லையேல் நாடு மீண்டும் வன்முறையை நோக்கி நகரும்
## பிரிட்டன் அமைச்சரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 06
கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை அரசு தவறவிட முடியாது. அவ்வாறு தவறவிடும் பட்சத்தில் ஆட்சியில் யார் இருந்தாலும் இந்த நாடு பின்னோக்கியே செல்லும். ஆகவே நீண்டகாலப் பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் காண முன்வருவது அவசியம். அவ்வாறு இது தீர்க்கப்படாவிடில் இந்த நாடு மீண்டும் ஒரு வன்முறையை நோக்கி நகரும்.
– இவ்வாறு நேற்று தன்னைச் சந்தித்த பிரிட்டனின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்கான அமைச்சர் மார்க் பீல்ட்டிடம் எடுத்துரைத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

பக்கம் 14 »

# அரசியல் கைதிகளென நாட்டில் யாருமில்லை
## கூறுகின்றார் நீதியமைச்சர்

கொழும்பு, ஒக். 06
அரசியல் கைதிகள் என்று யாரும் நாட்டில் இல்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்

பக்கம் 14 »

## 5 தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு:
# யாழ். இந்து, சாவகச்சேரி இந்து மாணவர்கள் தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலிடம்



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஒக். 05
வெளியாகியுள்ள ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரிட்சை பெறுபேறுகளின் படி 198 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலத்தில் முதலிடம்

பக்கம் 14 »

# 68ஆவது ஆண்டு நிறைவையொட்டி இராணுவத்தினர் சர்வமத வழிபாடு



யாழ்ப்பாணம், ஒக். 06
இலங்கை இராணுவத்தின் 68 ஆண்டு விழாவை முன்னிட்டு

பக்கம் 03 »

# தீர்வையற்ற வாகன அனுமதி சட்டப்படி எனக்குள்ள உரித்து
## அதனை உடன் வழங்குமாறு மங்களவுக்கு விக்கி கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 06
வடமாகாண முதலமைச்சரின் உரித்து வேறு, அதை நடை

பக்கம் 03 »

# அரசியல் கைதிகள் சகலரையும் புனர்வாழ்வளித்து விடுவியுங்கள்!
## மைத்திரியிடம் சாள்ஸ் எம்.பி. கோரிக்கை



மன்னார், ஒக். 06
யுத்தம் நிறைவடைந்த பின்னரும் சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளாக இருப்பவர்களுக்குப் புனர்வாழ்வளித்து விரைவில் விடுதலை செய்யவேண்டும் என ஜனாதிபதி முன்னிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.
'வனரோபா'

பக்கம் 14 »

# அதிகாரத்தையும், பணத்தையும் துறந்த ஒரே மக்கள் சேவகன் நான் மாத்திரமே!
## மன்னாரில் நேற்று ஜனாதிபதி பெருமிதம்

மன்னார், ஒக். 06
அதிகாரங்களையும், பணத்தையும் துறந்த ஒரே மக்கள் சேவகன்தான் மாத்திரமே என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
நீலப் பசுமை யுகத்தை நோக்கி அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்ப

பக்கம் 14 »



# யாழ்ப்பாணத்துக்கு வெட்டுப்புள்ளி 164

கொழும்பு, ஒக். 06
2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5ஆம் திகதி நடந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்

பக்கம் 03 »

# அங்கொட சந்தியில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் மரணம்!

கொழும்பு, ஒக். 06
கொழும்பு – அவிசாவளை பழைய வீதியின் முல்லேரியா – அங்கொட சந்தியில்

பக்கம் 14 »

# வைத்தியராகி வறிய கிராமங்களுக்கு சேவை செய்வதே எனது நோக்கம்!



வவுனியாவில் முதலிடம் பெற்ற மாணவி பாலகுமார் ஹர்த்திக் ஹன்சுஜா

வைத்தியராகி வறிய கிராமங்களுக்குச் சேவை செய்வதே எனது நோக்கம் என தேசிய ரீதியில் மூன்றாம் இடமும், மாவட்ட மட்டத்தில் முதலாம் இடமும் பெற்ற வவுனியா சிவபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி பாலகுமார் ஹர்த்திக் ஹன்சுஜா தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 197 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும், மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் வவுனியா சிவபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி பா.ஹர்த்திக் ஹன்சுஜா பெற்றுள்ளார்.

இந்த வெற்றி குறித்து மாணவி தெரிவிக்கையில் –

வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் 197 புள்ளிகளைப் பெற்றுள்ளேன். எனது பாடசாலை பின்தங்கிய கிராமத்தில் உள்ள ஒரு பாடசாலை. நான் இந்த நிலையை அடைய அப்பா, அம்மா, அதிபர், எனது பாடசாலை ஆசிரியர்களுமே காரணம். நான் காலையில் ஒவ்வொரு நாளும் ஒரு மணித்தியாலம் படிப்பேன். பாடசாலையில் தரும் வேலைகளை இரவில் செய்வதுடன், அதிக நேரம் படிப்பேன். நான் வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது விருப்பம். வைத்தியராகி வறிய கிராமங்களுக்கு உதவி செய்வதே எனது நோக்கம் எனத் தெரிவித்தார்.

அத்துடன், மாவட்டத்தில் முதலாம்மிடம் பெற்ற மணவியையும், குறித்த பாடசாலை அதிபர் பீற்றர் ஜெராட், வகுப்பாசிரியர் முத்துக்'குமார் லோகேஸ்வரி, தாய் பாலகுமார் கிருஸ்ணவேணி மற்றும் 165 புள்ளிகளைப் பெற்று குறித்த பாடசாலையில் சித்தியடைந்த மற்றைய மாணவி செ.டிலானி ஆகியோரைப் பாடசாலைக்கு வருகை தந்த மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் வன்னிகீதா கனகசபை தலைமையிலான மக்கள் வங்கி உத்தியோகத்தர்கள் வாழ்த்தியதுடன் மாணவிக்கு சைக்கிள் ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கினர்.

இதேவேளை, 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தரம் 5 வரை உள்ள நிலையில் 48 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 2012 ஆம் ஆண்டு ஒரு மாணவி புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த நிலையில் இம்முறையே இந்த பாடசாலை சாதனையை நிலைநாட்டியுள்ளது. (க- 100)

# பாடசாலைக் கல்வியே காரணம்

## கிளிநொச்சியில் முதல் நிலை பெற்ற மாணவன் தேனுசன்




கிளிநொச்சி, ஒக். 06

முற்று முழுதான பாடசாலைக் கல்வியே நான் மாவட்டத்தில் முதல் நிலை எடுப்பதற்குக் காரணமாக அமைந்தது என தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் 196 புள்ளிகளை பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் பெற்ற மாணவனான கனகலிங்கம் தேனுசன் தெரிவித்தார்

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவனான தேனுசன் ஏனைய மாணவர்கள் போன்று பிரபல்யமான தனியார் கல்வி நிலையங்களுக்கோ, பிரத்தியேக வகுப்புக்களுக்கோ சென்றது கிடையாது. அமைதியான கற்றல் செயற்பாடுகள், வகுப்பிலும் கற்றல் செயற்பாடுகளில் எப்பொழுதும் முதல் நிலையிலேயே இருந்து வந்துள்ளான் எனப் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது அதிக கவனம் செலுத்துவேன், அவர்கள் வழங்குகின்ற பயிற்சிகளைத் தவறாது செய்து முடிப்பதோடு, சிறிது நேரம் கற்றாலும் அவற்றை ஞாபகப்படுத்தி வைத்திக் கொள்வேன் என தேனுசன் தெரிவித்தார். (க – 70)

# என்னிடம் சட்டம் ஒழுங்கை தந்திருந்தால் நிலைமை வேறுமாதிரியாக இருந்திருக்கும்!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

எனக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவியைத் தந்திருந்தால் இலங்கை பொலிஸ் இவ்வளவு குழப்பத்திற்குள் தள்ளப்பட்டிருக்காது என அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகள் பாதாள உலகக் கும்பல்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களுடன் இணைந்து செயல்படுகின்றனர்.

இது குறித்து நான் சுட்டிக்காட்டிய போதிலும் அதனை எவரும் செவி



மடுக்கவில்லை. அரச மட்டத்தில் நான் தெரிவித்த விடயங்கள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாகவே பொலிஸார் மத்தியில் ஒழுக்கமின்மை அதிகரித்துள்ளது. தற்போதைய குழப்ப நிலைக்குப் பொலிஸ் மா அதிபரை மாத்திரம் குற்றம்சாட்ட முடியாது .

தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அதற்கு மேல் உள்ளவர்களும் தற்போதைய குழப்பநிலைக்கு பொறுப்பேற்கவேண்டும்.

பொலிஸ்மா அதிபர் தகுதியற்றவர் என யாராவது தெரிவித்தால் அதற்கான பொறுப்பைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஏற்கவேண்டும் அவர்களே இந்த நியமனத்திற்கு காரணம். – என்றார்.

# கொழும்புத் துறைமுகத்தில் சீன கடற்படையின் நீர்மூழ்கி!



சீன கடற்படையின் நீர்மூழ்கி ஆதரவுக் கப்பல் (Submarine Support Ship) நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக வந்துள்ளது. இந்தக் கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

நான்கு நாள்கள் பயணமாக கொழும்பு வந்துள்ள, கப்பல்,135 மீற்றர் நீளத்தையும், 18.6 மீற்றர் அகலத்தையும் கொண்டது.

நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு வழித்துணையாக செல்லும் இந்தக் கப்பலில் விநியோக ஆதரவு மற்றும் நீர்மூழ்கிகளைப் பழுதுபார்க்கும், செயலிழந்த நீர் மூழ்கிகளைக் கடலுக்கு அடியில் இருந்து மீட்கும், நவீன வசதிகள் மற்றும், அதற்கான நீர்மூழ்கி வாகனங்கள் போன்றவற்றையும் கொண்டுள்ளது.

கொழும்பில் இந்தக் கப்பல் தங்கியிருக்கும் போது, சீன மாலுமிகள் இலங்கை கடற்படையினருடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, கடந்த மாதம் 30ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த ஜப்பானிய கடற்படையின் ககா என்ற உலங்குவானூர்தி தாங்கிக் கப்பலும், இனாசுமா என்ற நாசகாரி கப்பலும், நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றன.

# அதிகளவான பயிற்சிகளே எனது வெற்றிக்கு காரணம்!

## கிளிநொச்சியில் இரண்டாம் நிலை பெற்ற மாணவன் கதிர்நிலவன்



தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சைக்காக நான் படிக்கின்ற போது அதிகளவு பயிற்சியைச் செய்திருக்கின்றேன். அதுவே இந்த வெற்றிக்குக் காரணம் எனக் கிளிநொச்சியில் 195 புள்ளிகளை பெற்று இரண்டாம் நிலை பெற்ற மாணவன் கேதீஸ்வரன் கதிர்நிலவன் தெரி வித்தார்.

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவனான கதிர்நிலவன், தான் பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளில் எப்பொழுதும் முதல் நிலை யிலேயே இருந்து வந்துள்ளதாகவும், பரீட்சையை நோக்காகக் கொண்டு இயல்பாக வழமை போன்று கற்று வந்ததாகவும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களும், ஆசிரியையான எனது அம்மாவும் பாடசாலை அதிபரும் தனக்கு ஊக்கமளித்தார்கள் என்றும் அவர் கூறினார். (க-70)

# இடைக்கால அரசு அமைக்கும் எண்ணம் சு.கவுக்கு இல்லை

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

சுதந்திர கட்சிக்கு இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கான எண்ணம் இல்லை. அத்தோடு 2020 ஆம் ஆண்டு வரை தேசிய அரசே தொடரும் என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய அரசை கவிழ்ப்பதற்கு இடைக்கால அரசை அமைக்க வேண்டும் என்ற யோசனை ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் முன்வைக்கப்பட்டது. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களால் அது நிராகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தற்



போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணைந்து இடைக்கால அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்திருந்தமை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சிக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பு

## கூறுகிறார் மஹிந்த சமரசிங்க

அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் இருந்து விலகி பொறுப்புடன் செயற்பட்டமையினால் நாணயத்தின் பெறுமதி குறைவடையும் சவாலுக்கு வெற்றிகரமான முறையில் முகம்கொடுக்க முடிந்துள்ளது என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகும்.

விரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் சுதந்திரக் கட்சி வலியுறுத்து கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தீர்வையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்தும் நடவடிக்கைகள் வேறு என்பதை அமைச்சர் மங்கள சமரவீர சரியாகப் புரியாது விட்டுள்ளார்என்றேதோன்றுகிறது. அதனால் அவருக்கு உடனே கடிதம் எழுதி, தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரம் எனக்கு வழங்கவேண்டியது சட்டப்படி எனது உரித்து என்றும், அதனை வழங்குமாறும் கேட்டுள்ளேன்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன்.

65ஆயிரம் டொலர் பெறுமதியான தீர்வையற்ற வாகனம் ஒன்றை கொள்வனவு செய்ய வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அமைச்சரவை அனுமதி மறுத்தமை தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து வெளியிட்டுள்ளவிளக்கத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முதலமைச்சருக்குரிய இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகன அனுமதிப் பத்திரம் தொடர்பாகத் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் செய்திகளை முழுமையற்றனவாகவும் தமக்கு ஏற்றவிதத்திலும்தவறானவழியில் பிரசுரித்துப் பொதுமக்களுக்கு பல உண்மைக்குப் புறம்பான செய்திகளை வழங்கியிருக்கின்றமை வருத்தத்திற்குரியது.

இந்நிலையில்இதன்உண்மை நிலையை பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய ஒரு சூழ் நிலையில் இந்த அறிக்கையைப்பத்திரிகைகள்பிரசுரிப்பதற்காக அனுப்பி வைக்கின்றேன்.

இரண்டரைவருடங்கள்பூர்த்தி செய்த வடமாகாண சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகன அனுமதிப் பத்திரங்களினூடாக 40,000 அமெரிக்க டொலருக்குக் குறைவான வாகனமொன்றைத்தீர்வை நீக்கி இறக்குமதிசெய்து பயன்படுத்த முடியும்.

முதலமைச்சர் என்றவகையில்நான்கூடுதல்பெறுமதியுடைய 65,000 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகனமொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியுடையவனாக இருந்த போதும்எனக்கும்40,000 அமெரிக்க டொலருக்குக் குறைவான அனுமதிப்பத்திரமே வழங்கப்பட்டிருந்தது. மற்றைய உறுப்பினர்களைப்போன்று எனக்கும் இந்த அனுமதிப் பத்திரம் தரப்பட்டிருந்தது.

அதன் பின் தற்செயலாகவே முதலமைச்சருக்கு வழங்கப்படவேண்டிய வாகனம் 65,000 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய இறக்குமதித் தீர்வை நீக்கிய அனுமதிப் பத்திரமே என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே முன்னைய குறைந்த பெறுமதிக்குரிய அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்து எனது பதவிக்கு உரித்தான 65,000 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய இறக்குமதித் தீர்வை நீக்கிய அனுமதிப் பத்திரத்தை வழங்கி உதவுமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். நாட்டின் மற்றைய முதலமைச்சர்கள் யாவருக்கும் இந்தக் கூடிய பெறுமதி வாய்ந்த வாகன அனுமதிப் பத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

அமைச்சின் கோரிக்கைக்கு இணங்க குறைந்த பெறுமதி வாகனத்திற்கான எனக்குத் தரப்பட்ட அனுமதிப் பத்திரம் அவர்களுக்கு திருப்பிஅனுப்பப்பட்டு அது இரத்துச் செய்யப்பட்டது. எனக்குக் கூடிய பெறுமதியுடைய வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என்றும் இது சம்பந்த மாகத்தவறு நேர்ந்திருந்தமையும் அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அந்தத் தவறைத் திருத்த அமைச்சர்கள் குழாம் முன் அனுமதி பெறவேண்டியிருந்ததால் அதனைப் பெற்றுத் தருவதாக அமைச்சினால் கூறப்பட்டது. 40000 டொலரோ 65000 டொலரோ அனுமதிப்பத்திரம் இறக்குமதித் தீர்வை மட்டுந்தான் நீக்கியது. வாகனமானது அந்தப் பணத்தைச் செலுத்தியே இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. அதற்கான பணத்தை நான் என் மகனிடம் இருந்து பெற இருந்தேன்.

ஆனாலும் அமைச்சு அலுவலகங்களில் எனது அனுமதிப் பத்திரம் தொடர்பான கோரிக்கை பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டு கடந்த வாரமே அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதேகால கட்டத்தில் இந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் இறக்குமதித் தீர்வை நீக்கிய வாகனங்களை இறக்குமதி செய்வது ஒரு வருட காலத்திற்கு அரசினால் பிற்போடப்பட்டிருந்தது.

எனவே அமைச்சர் பைசர் முஸ்தாபா அந்த அனுமதிப் பத்திரத்திற்கு மாகாணசபை முதலமைச்சர் உரித்துடையவர் என்பதை அமைச்சரவைக்குக் கூறி அனுமதி பெற விழைந்த போது நிதியமைச்சர் மங்கள சமரவீர, இறக்குமதி பிற்போடப்பட்டுள்ளதால் அனு மதிப்பத்திரம் வழங்க லாகாது என்று கூறியதால் அமைச்சரவை அனுமதிப் பத்திரத்தை வழங்குவதைத் தடை செய்தார் எனக் கேள்விப்படுகின்றேன்.

ஆனால் வடமாகாண முதலமைச்சரின் உரித்து வேறு, அதை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் வேறு என்பதை அமைச்சர் மங்கள சமரவீர சரியாகப் புரியாது விட்டுள்ளார் என்றே தோன்றியது. அதனால் அவருக்கு உடனே கடிதம் எழுதி அனுமதிப் பத்திரம் எனக்கு வழங்க வேண்டியது சட்டப்படி எனது உரித்து என்றும், ஆனால் அதனை ஒரு வருடத்துக்கு நடைமுறைப்படுத்தாது வைத்திருப்பது எனது கடமை என்றும் கூறி அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு கேட்டுள்ளேன்.

மற்றைய உறுப்பினர்களுக்கு அவர்களுக்குரிய குறைந்த தொகையிலான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அவர்கள் ஏற்கனவே நடவடிக்கைகளில் இறங்கிவிட்டார்கள் என்று அறிகின்றேன்.

என்னுடைய குறைந்த பெறுமதி வாகன அனுமதிப்பத்திரமோ அமைச்சினால் திரும்பப் பெற்று அது ரத்துச் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ரத்துச்செய்தமைக்குக் காரணம் அமைச்சரவை கூடிய பெறுமதிக்குரிய அனுமதிப் பத்திரத்தைக் கட்டாயம் வழங்கும் என்ற அவர்களின் திடமான நம்பிக்கையே. தற்போது கூடிய பெறுமதிக்குரிய அனுமதிப் பத்திரமும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனைச் சில கொழும்பு சிங்களப் பத்திரிகைகள் சரியாக பிரசுரித்தபோதும் ஆங்கிலப் பத்திரிகைகளும் தமிழ்ப் பத்திரிகைகளும்தங்கள்தங்கள்கைவண்ணங்களைக் காட்டியமையுடன், நான் ஏதோ வரிச்சலுகை அடிப்படையில் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்திற்காக ஏங்கித் தவிக்கிறேன் எனவும் அது கிடைக்காததால் நான் குழப்பத்தில் உள்ளேன் எனவும் வர்ணனை செய்திருப்பது வருத்தத் திற்குரியது.

அவ்வாறு வரிச்சலுகை அனுமதிப் பத்திரத்தின் மீது அவ்வளவு ஈடுபாடுடையவனாக நான் இருந்திருப்பின் கிடைத்த அந்த அனுமதிப் பத்திரம் கைவசம் வந்த வுடனேயே அதனைப்பயன்படுத்தியிருப்பேன். அல்லது உயர் பெறுமதியுடைய புதிய அனுமதிப் பத்திரத்திற்காக உடனேயே விண்ணப்பித்திருப்பேன். தமது தவறை ஏற்று அமைச்சு அதனைச் சீர் செய்ய முன்வந்ததால்தான் நான் இதுகாறும் வாளாதிருந்தேன்.

எனினும் கடைசியாக அமைச்சர் அவைக்கு மேற்படி விடயம் வந்தபோது பாஸ்கரலிங்கம் அவர்களிடம், அனுமதிப்பத்திரம் பெறுவது எனது உரித்து என்றும், தடையை நடைமுறைப்படுத்துவது எனது கடமை என்றும் கூறியிருந்தேன். அதற்கு அவர் அமைச்சர்களுக்கு அது தெரியுந்தானே என்றார். அதனால் நான் நிம்மதியாக இருந்தேன். ஆனால் அமைச்சர்களுக்கு அது புரியவில்லை என்று இப்பொழுதுதான் அறிந்து கொண்டேன்.

அரசியல் ரீதியாக என் மீது ஏதாவது கோபங்களிருப்பின் எனது அரசியல் பற்றி நேரடியாக எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் விமர்சிக்க வேண்டும். அதனை விடுத்து இது போன்ற அற்பத்தனமான செய்திகளைப் பிரசுரித்து உங்கள் பத்திரிகையின் கௌரவத்தையும் பத்திரிகைத் தர்மத்தையும் குறைத்துக் கொள்ளாதீர்கள் என குறிப்பாக தமிழ்ப் பத்திரிகைகளிடமும் ஆங்கிலப் பத்திரிகைகளிடமும் அன்புடன் வேண்டுகின்றேன். – என்றுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்களுக்கும் முன்னணி அனுசரணை வழங்கி, முன்னின்று நடத்திய அமெரிக்காதான். அமெரிக்காவுடன் இங்கிலாந்து, மஸிடோனியா, மொண்டேநெக்ரோ ஆகியவையும் சேர்ந்து இந்தப் பணியை முன்னெடுத்தன.

ஆனாலும், இவ்விடயத்தில் விடாப்பிடியாக இருந்தது அமெரிக்காதான்.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இஸ்ரேல் தொடர்பாக எடுத்து வரும் தீர்மானங்களினால் அதிருப்தியுற்ற அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், மேற்படி கவுன்ஸிலிலிருந்து தமது நாடு வெளியேறுகின்றது என்று அறிவித்தார்.

அதனால் பெரிதும் மகிழ்ந்தது இலங்கைதான். மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஒரு தொல்லை – ஒரு சனியன் – தொலைந்தது என்று சந்தோஷப்பட்டது கொழும்பு.

எனினும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இருந்து வெளியேறினாலும், அங்கு அமெரிக்காவும் முன்னர் அனுசரணைப் பணி வகிக்க, இலங்கையும் சேர்ந்து கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றிய – யுத்தகால குற்றங்கள் தொடர்பில் நீதி விசாரணை நடத்தி, பொறுப்புக்கூறலை நிலை நிறுத்தும் – தீர்மானத்தின் வாசகங்கள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதை அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி நிற்கும் என அறிவித்து, கொழும்பிற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது ட்ரம்ப் நிர்வாகம்.

இப்போது அமெரிக்கா, வெளியேறியதால் மேற்படி தீர்மான விவகாரத்தை முன்மொழிந்த தரப்பில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு ஜேர்மனி வந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இலங்கையைப் பொறுப்புக்கூற வைக்கவேண்டும் என்ற ஐரோப்பிய யூனியனின் கடும்பிடி நிலைப்பாட்டை முக்கியமாக முன்னெடுத்துச் செல்வது ஜேர்மனிதான்.

அமெரிக்கா வெளியேற அந்த இடத்துக்கு ஜேர்மனி வந்திருப்பது இலங்கையைப் பொறுத்தவரை சட்டியிலிருந்து வெளியேறி அடுப்பில் விழுந்த கதை மாதிரித்தான் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்...!

- மின்னல் -

# பன்னிரு வேங்கைகளுக்கு தீருவிலில் நேற்று அஞ்சலி



யாழ்ப்பாணம், ஒக்.06

இந்திய – இலங்கை கூட்டுச்சதியால் தற்கொடையான குமரப்பா மற்றும் புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் 31ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று மக்களால் தீருவில் அரங்கில் அனுஷ்டிக்கப்பட்டது.

தற்கொடையான பன்னிரு போராளிகளுள் ஒருவரின் 96 வயதுடைய தாயார் பொதுச்சுடரை ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தினார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மூத்த பிரஜைகள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட பலர் மலரஞ்சலி செலுத்தினர். (ஐ-7)

# விசேட கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று திங்களன்று

கொழும்பு, ஒக். 06

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் எதிர்வரும் திங்களன்று விசேட கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இதில் கட்டாயம் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரமுகர்கள் கொலைச் சூழ்ச்சி, பொலிஸ்மா அதிபரின் செயற்பாடு, பொருளாதார நெருக்கடி உட்பட மேலும் பல விவகாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்குரிய திகதியை நிர்ணயிப்பதற்காகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதத்துக்குரிய முதல்வார நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எனினும், அதற்கு முன்னர் அவசரமாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கூட்டு எதிரணி கோரிக்கை விடுத்தது. காரணங்களை பட்டியலிட்டுக் காட்டிக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஷ் குணவர்தன சபாநாயகருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின்பிரகாரம், நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுவதற்குரிய அதிகாரம் பிரதமருக்கே இருக்கின்றது. அந்த அடிப்படையில் கூட்டு எதிரணியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவே அறியமுடிகின்றது. (ஐ)

## யாழ்ப்பாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைப் பெறுபேறுகள் நேற்று முற்பகல் வெளியிடப்பட்டன. வெட்டுப் புள்ளிகளும் நேற்று வெளியாகின.

| | |
|---|---|
| கொழும்பு | -168 |
| கம்பஹா | -168 |
| களுத்துறை | -168 |
| கண்டி | -168 |
| காலி | -168 |
| மாத்தறை | -168 |
| மாத்தளை | -168 |
| குருநாகல் | -168 |
| கேகாலை | -168 |
| அம்பாந்தோட்டை | -166 |
| இரத்தினபுரி | -166 |
| மொனராகலை | -165 |
| பதுளை | -165 |
| அனுராதபுரம் | -165 |
| பொலநறுவை | -165 |
| புத்தளம் | -165 |
| யாழ்ப்பாணம் | -164 |
| மட்டக்களப்பு | -164 |
| வவுனியா | -164 |
| கிளிநொச்சி | -163 |
| நுவரெலியா | -163 |
| அம்பாறை | -164 |
| முல்லைத்தீவு | -163 |
| திருகோணமலை | -163 |
| மன்னார் | -162 |

## 68ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட இராணுவத்தினர் விசேட மத வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தலைமையில் இந்த வழிபாடுகள் இடம்பெற்றன.

நேற்றுக் காலை யாழ். நகரில் உள்ள நாக விகாரைக்குச் சென்ற மாவட்ட இராணுவத் தளபதி தலைமையிலான இராணுவத்தினர் அங்கு பௌத்த மத வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

யாழ். ஐந்துச் சந்தி பகுதியிலுள்ள ஜும்மா பள்ளிவாசலுக்கும் பின்னர் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலயத்துக்கும் சென்று அவர்கள் விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து யாழ். மரியன்னை பேராலயத்திலும் அவர்கள் வழிபட்டனர். (ஐ-7)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கடைசி நேர வாய்ப்பு இது!

நேற்று முன்தினம் யாழ். நகரில் அமெரிக்கத் துணைத் தூதுவரைச் சந்தித்துப் பேசிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அந்தச் சந்திப்புக்கு குறித்து ஊடகவியலாளர்களுக்குத் தகவல் வெளியிட்ட சமயம் முக்கிய விடயம் ஒன்றைக் கூறியிருக்கின்றார்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மான விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கும் உத்தேசம் சர்வதேசத்துக்கு உள்ளது என்பதையே அமெரிக்கத் துணைத் தூதருடனான சந்திப்பில் அறிந்து கொண்டேன் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதுதான் நிலைமை என்றால், மைத்திரி – ரணில் கூட்டையும் நல்லாட்சி அரசையும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்காகத் தமிழர் தரப்பு ஐக்கியப்பட்டு எடுத்த முயற்சிக்கு அநுகூலமான பிரதிபலன்கள் கிட்டவேயில்லை என்பதுதான் நிலைமை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான விடயங்களையும் உள்ளடங்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி அரைக் கிணறு மட்டுமே தாண்டிய நிலையில் சிக்குப்பட்டு நிற்கின்றது.

இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழ்ப் பொதுமக்களின் காணிகளை விடுவித்தல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விலக்குதல் போன்ற தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளிலும் திருப்தி தரும் முன்னேற்றம் இல்லை.

காணாமல்போன பல்லாயிரம் தமிழர்களின் உறவுகளின் அந்தர நிலைமையும் தொடருகின்றது. அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிக்கும் செயற்பாடும் கூட இந்தா, அந்தா என்று பேசப்படுகின்றதே தவிர, எதுவும் உருப்படியாக நடைபெறவில்லை.

போதாக்குறைக்கு யுத்த காலக் கொடூரங்கள், அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்ற மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான மோசமான செயற்பாடுகள் குறித்து, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலையும், நீதியையும் நிலைநாட்டி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் செயற்பாடும் கூட, அது தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றி நான்கு வருடங்கள் கடந்த பின்னரும் முன்நகரவே போவதில்லை என்பதும் தெளிவாகி வருகின்றது.

அமெரிக்கத் துணைத் தூதருடனான சந்திப்பின் பின்னர் முதல்வர் விக்னேஸ்வரன் கூறியிருக்கும் தகவல் இவற்றைத்தான் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

நல்லாட்சி அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்து அலங்கரித்ததில் தமிழர் தரப்புக்கும் கணிசமான பங்கு உண்டு.

ஆனால், அதனால் திருப்தி தரக்கூடிய பயனேதும் தமிழர் தரப்புக்குக் கிட்டவில்லை என்ற அதிருப்தி நிலைமை மேலோங்கி வரும் இச்சமயத்தில்தான் –

தற்போதைய ரணிலின் அரசை வரும் வரவு – செலவுத் திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பின் போது வீழ்த்துவதற்கு ஆதரவு தருமாறு தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்படும் என்று சுதந்திரக்கட்சியின் அதிருப்திக் குழுவான – பதினைந்து எம்.பிக்களின் அணியின் – பிரதிநிதி எஸ்.பி.திஸாநாயக்கவின் கருத்தும் –

தாம் விரைவில் மீண்டும் அதிகாரத்துக்கு வந்ததும், நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு அடுத்த இரண்டு வருடங்களுக்குள் இணக்கமான தீர்வு காணப்படும் என்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவிப்பும் –

வெளியாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி அரசை ஆட்சிக் கொண்டு வந்து, அதன் மூலம் இதுவரை நீண்ட காலமாக இழுபடும் தேசிய இனப் பிரச்சினைக்கு நல்லிணக்கத்துடனான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தமிழ்க் கூட்டமைப்பு எடுத்த முயற்சிகள் – பகீரதப் பிரயத்தனங்கள் – நல்லாட்சி அரசுத் தலைமையின் துணிச்சலான, உறுதியான, திராணிமிக்க நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால் தடைப்பட்டுப் போயிருக்கின்றன.

இதற்கு மேலும் இந்த விடயத்தை வெறுமனே பார்த்து, சகித்து, பொறுத்துக் கொண்டு தமிழர் தரப்பு வாளாவிருப்பது, கடைசியில் தமிழர்களை மீண்டும் ஒரு தடவை ஏமாந்த சரிதத்துக்குகள் தள்ளுவதாகவே முடியும்.

மாற்றுத் தரப்புகளிடமிருந்து வந்த கருத்துக்களையும் உள்வாங்கி, நல்லாட்சி அரசை சரியான வழிக்குக் கொண்டு வருவதற்கான மருந்தை தமிழர் தரப்புத் தலைமை நாட வேண்டிய இறுதிக் கட்டம் வந்திருப்பதாகவே நம்புகின்றோம்.

வரவு – செலவுத் திட்டம் உட்பட எல்லா விடயங்களிலும் நல்லாட்சி அரசைக் கண்மூடித்தனமாக ஆதரிப்பது என்ற நிலைப்பாப்பாட்டிலிருந்து விலகி, சாணக்கியத்துடனும், தந்திரத்துடனும் விவகாரங்களை அணுகி, தேவைப்படும் சமயங்களில் பொருத்தமான நிபந்தனைகளை விதித்து, அவற்றின் அடிப்படையில் நல்லாட்சியை வழிக்குக் கொண்டு வரும் மார்க்கத்தைக் கூட்டமைப்புத் தலைமை கைக்கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டத்திலும் விடயங்களைக் கோட்டை விட்டால், நல்லாட்சி அரசின் கீழ் எதனையுமே ஈட்டவில்லை என்ற அபவாதமே கூட்டமைப்புக்கு மிஞ்சும்.

# இலங்கை வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற அமெரிக்கா ஒத்துழைக்கும்

### வடக்கு முதலமைச்சரிடம் அந்த நாட்டுத் துணைத் தூதுவர் உறுதி

யாழ்ப்பாணம், ஒக். 06

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமெரிக்கா தொடர்ந்து நடவடிக்கைகளை எடுக்கும். ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறினாலும் கூட, இலங்கை விவகாரத்தில் இணக்கப்பாடு ஏற்பட்ட விடய நிறைவேற்ற ஒத்துழைப்போம்.

– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் உறுதியளித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் துணைத் தூதுவர் றொபேட் கில்ரன்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதுவர் றொபேர்ட் கில்ரன், வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை இச்சந்திப்பு இடம்பெற்றது.

அமெரிக்கத் துணைத் தூதுவருடனான சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு நேரில் பயணம் செய்து அரசியல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் தகவல்களை சேகரித்து வருவதாக அமெரிக்கத் துணைத் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா அரசியல் ரீதியாக எந்த நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது என்பதை அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, அமெரிக்க அந்தச் சபையில் இருந்தது. எனினும் தற்போது அமெரிக்க வெளியேறிவிட்டது.

அதனால் இலங்கை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விலகப் போகிறீர்களா? என்று அவரிடம் கேள்வி எழுப்பினேன்.

இல்லை... இல்லை... ஐ.நா. மனித உரிமைகள் சபையில்தான் நாம் இருக்கமாட்டோம். சபையின் பக்கத்தில் இருப்போம். உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்றார் அவர்.

ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறி இருந்தாலும் கூட இலங்கை அரசின் இணக்கப்பாட்டுடன் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பை வழங்குவோம் என்று குறிப்பிட்டார்.

மேலும் இலங்கையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை அவர்கள் நடைமுறைப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கைகளை எடுப்போம் என்றும் அமெரிக்க துணைத் தூதுவர் உறுதியளித்தார் – என்றார். (ஐ-7)

# ஐ.நாவில் இலங்கை அரசுக்கு காலநீடிப்பு கிடைக்க வாய்ப்பு

### அமெ. தூதருடனான சந்திப்பையடுத்து வடக்கு முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 06

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள காலத்தை நீடிக்கும் உத்தேசம் சர்வதேசத்துக்கு உள்ளது என்பதையே அமெரிக்கத் துணைத் தூதுவருடனான சந்திப்பில் அறிந்துகொண்டேன் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் துணைத் தூதுவர் றொபேர்ட் கில்ரன், வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை நேற்று முன்தினம் மாலை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போதே மேற்படி விடயத்தைதாம் அறிந்து கொண்டார் என்றார் விக்னேஸ்வரன்.

அமெரிக்க துணைத் தூதுவருடனான சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வழக்கமாகக் கடைசி நேரத்தில்தான் இலங்கை அரசு ஏதாவது ஒன்றைச் செய்யும். எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுக்கு முன்னர் ( இலங்கைக்கு வழங்கப்பட்ட 2 வருட கால அவகாசம் நிறைவடையும் காலம்) ஏதாவது முக்கியமான விடயங்களை அரசு தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக அமெரிக்கத் துணைத் தூதுவர் கூறுகின்றார்.

அதன் அர்த்தம் என்னவென்றால், இலங்கை அரசு இந்த முறை ஏதாவது கொஞ்சம் கொடுக்கும் – மேலும் கால நீடிப்பை வழங்கினால் பின்னர் இன்னும் கொஞ்சம் கொடுக்கும். என்ற வகையில்தான் அமெரிக்கத் தூதரின் கருத்து இருந்தது – என்றார். (ஐ-7)

# மைத்திரி – ரணில் கூட்டு அரசு தொடர்ந்தும் நீடிக்கவேண்டும்

### அமெரிக்காவின் விருப்பத்துக்கு முதலமைச்சர் இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றிணைந்து முன்னேறவேண்டும் என்பதுதான் எனது கருத்தும் துணைத் தூதுவருடைய கருத்துமாகும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இருவரும் தமது அரசியல் எதிர்பார்ப்புக்களை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்கத் துணைத் தூதுவருடனான சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்ததவை வருமாறு:–

தமிழ் மக்களுக்கு நன்மையைத் தரும் வகையில் யார் யார் அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எடுக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர வேண்டும் என்ற கருத்தை அமெரிக்கத் துணைத் தூதுவர் வெளியிட்டார்.

அதனைத்தான் நானும் சொல்கிறேன் என்று அவருக்கு எடுத்துக் கூறினேன்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி அவ்வாறான கருத்தை உடைய மக்கள் ஒன்று சேர்ந்ததால்தான் வேறுவிதமான சிந்தனைகளையுடைய கட்சிகளை முறியடிக்கக்கூடியதாக இருந்தது.

எதிர்வரும் காலங்களிலும் அந்தக் கட்சிகளுக்கு இடையே ஒற்றுமை இருந்தால்தான் தமிழ் மக்களுக்கு நன்மையளிப்பவற்றை நடைமுறைப்படுத்த முடியும் என்று நான் அவரிடம் தெரிவித்தேன்.

தங்களுடைய கருத்தும் அதுதான் என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் ஒன்றிணைந்து முன்னேறவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தும் அமெரிக்க துணைத் தூதுவருடைய கருத்துமாகும் – என்றார். (ஐ-7)

## நாளை

07.10.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: பூரம் பி.ப. 3.15 வரை
திதி: திரயோதசி பி.ப. 1.07 வரை
சுபநேரம்: 9.02 – 10.32 வரை
இராகுகாலம்: 4.32 – 6.02 வரை

# கடன் இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி சீனா உலகளாவிய செல்வாக்கை விரிவுபடுத்துகிறது!

## அம்பாந்தோட்டை சிறந்த உதாரணம் என்கிறார் அமெரிக்க உப ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 06

கடன் இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி சீனா தமது உலகளா விய செல்வாக்கை விரிவுபடுத்தி வருகிறது என அமெரிக்க உப ஜனாதிபதி மைக் பென்ஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையின் துறைமுகம் (அம்பாந் தோட்டை) பீஜிங்கின் 'நீல நீர் கடற்படை' இராணுவத் தளமாக விரைவில் மாறும் என்பது அதற்கு சிறந்த உதாரணமாகும் என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஹட்சன் நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்ற வெளியுறவு கொள்கை தொடர் பான ஒரு முக்கியமான உரையிலேயே அவர் இந்த விடயங்களை தெரிவித்துள் ளார். இதன்போது மேலும் கூறுகையில் –

ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பா மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் உட்கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்த நூற்றுக் கணக்கான பில்லியன் டொலர்களை சீனா கடனாக வழங்கி வருகின்றது.

அந்த கடனுக்கான விதிமுறைகள் மற்றும் நலன்கள் பெருமளவில் பீஜிங் கிற்கு சாதகமானதாகவே அமைகின்றன.

இது தொடர்பில் கேள்விக்குரிய, வணிக மதிப்புடன் ஒரு துறைமுக உருவாக்க அனுமதிக்கு சீன அரசு நிறுவனங்களி டமிருந்து பெரும் கடனைப் பெற்ற இலங் கையை கேளுங்கள் – என்றும் அமெரிக்க உப ஜனாதிபதி கூறியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அந்த நாட்டினால் பணம் செலுத்துவதற்கு இனிமேல் முடியாது என்றும், எனவே புதிய துறைமுகத்தை நேரடியாக சீனாவின் கையில் ஒப்படைக்குமாறும் பீஜிங் அழுத் தம் கொடுத்தது.

எனவே, அது விரைவில் சீனாவின் வளர்ந்து வரும் நீல நீர் கடற்படைக்கு ஒரு முன்னோக்கிய இராணுவத் தளமாக மாறும் என்றும் அமெரிக்க உப ஜனாதி பதி மைக் பென்ஸ் தெரிவித்துள்ளார். (கு)

# மாகாணசபைத் தேர்தலை சந்திக்க சு.கவுக்கு அச்சம்

## கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் நஸீர் அஹமட் கருத்து



மாகாணசபைத் தேர்தலை சந் திக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே தயக்கம் காட்டுகின்றது. ஏனைய பிரதான கட்சிகள் அனைத்தும் தயார் நிலையிலேயே இருக்கின் றன என கிழக்கு மாகாண முன் னாள் முதல்வர் நஸிர் அஹமட் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் காலம் கடந்து செல்வது தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்தில் நாட்டிலுள்ள பிரதான கட்சிகள் அனைத்தும் பழைய முறைமையிலேயே தேர்தலை நடத்த வேண்டும் எனத் தம்மிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன எனவும் எந்நேரத்திலும் தாங்கள் தேர்தலை சந்திக்கத் தயாராக இருக்கின்றனர் எனத் தெரிவித்தி ருந்தார். இந்த நிலைப்பாட்டையே குறிப்பாகச் சிறுபான்மை மக்க ளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் கொண்டுள்ளன.

எந்த நேரத்தில் தேர்தல் நடத் தப்பட்டாலும் அதனைச் சந்திக்க ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டு எதி ரணி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முக்கிய கட்சிகள் தயார் நிலையில் உள்ளன.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே தயக்கம் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே மாகாண சபை தேர்தல் காலம் கடந்தப்படு கின்றது என எண்ணத் தோண்று கின்றது.

நாட்டில் தற்போதுள்ள அரசி யல் சூழ்நிலையில் தமக்கான வெற்றி வாய்ப்பு சிறப்பானதாக அமையமாட்டாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐயமே மாகாண சபைத் தேர்தல் தள்ளிப் போகக் காரணமாக அமைகின்றது என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடிகிறது. எது எப்படியிருப்பினும் இனியும் காலம் தாழ்த்தாது மாகாண சபைத் தேர்தலை நடத்து வதற்கான தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 1000 ரூபா சம்பளம் வேண்டும்: மஸ்கெலியாவில் ஆர்ப்பாட்டம்!



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கோரி மஸ்கெலியா மொக்கா மற்றும் காட் மோர் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 500 இற்கும் மேற் பட்ட தோட்ட தொழிலாளர்கள் நேற்றுக் காலை தோட்ட காரியாலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கோஷங்களை எழுப்பியவாறு, பதாதைகளை ஏந்தியவண்ணம் இந்த ஆர்ப்பாட்டத்தை சுமார் ஒரு மணித்தியாலயம் வரை முன்னெடுத்தனர்.

தோட்ட தொழிலாளர்களை வழமைபோல் ஏமாற் றாமல் நியாயமான சம்பளத்தினை பெற்று தர வேண்டுமெனவும், கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாதிடு கின்ற தொழிற்சங்கங்கள் உரிய முறையில் பேச்சை நடத்தி ஆயிரம் ரூபவை அடிப்படை சம்பளமாக பெற்று தரவேண்டுமெனவும், அவ்வாறு பெற்றுத் தராவிடின் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடத் தயார் என வும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோட்ட தொழிலாளர் கள் தெரிவித்தனர்.

# வியாழன் இரவு குரு பெயர்ச்சியின்போது வியாழ பகவானைச் வழிபட்டார் நாமல்



குரு பகவான் நேற்று முன்தினம் இரவு 10.05 மணிக்கு துலாம் ராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு மாறும் நிகழ்வை உலகளாவிய ரீதியில் உள்ள இந்துக்கள் குரு பெயர்ச்சியாக வழிபட்டார்கள்.

இதை முன்னிட்டு அனைத்து இந்து ஆலயங்களிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமையுடன், அனைவரும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

குரு மாறும் போது ஒவ்வொரு ராசிக்குமான பலன்களும் மாறுபடும். சிலருக்கு நன்மை பயக்கும், சில ராசிக் காரர்களுக்கு மத்திமம் மற்றும் தீய பலன்கள் கிடைக்கும்.

இதற்கான பரிகாரங்களை செய்வதற்கு அனைவரும் பய பக்தியுடன் ஆலயங்களுக்கு செல்வார்கள்.

அந்த வகையில் நேற்று முன்தினம் இலங்கையிலும் பலரும் ஆலயங்களை நோக்கிப் படையெடுத்தமையைக் காணக்கூடிய தாக இருந்தது.

இந்துக்கள் மட்டுமல்லாது ஏனைய மதத்தவர்களும் நேற்று முன்தினம் ஆலயங்களுக்கு வந்து வழிபாடுகளில் ஈடுபட்டி ருந்தனர்.

அந்த வகையில், வெள்ளவத்தையில் உள்ள மயூராபதி அம்மன் ஆலயத்தில் குரு பகவானுக்கு நடைபெற்ற மாலை நேர விசேட பூஜை வழிபாடுகளில் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டுள்ளார்.

இதன்போது அவருக்காக விசேட பூசைகள் ஏற்பாடு செய் யப்பட்டிருந்தமையுடன், அவருடன் ஏனைய முக்கியஸ்தர்க ளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மின் தடை

யாழ்ப்பாணம் ஒக். 06

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராம ரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 ம ணியிலிருந்து மாலை 6.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

தொண்டமனாறு, கெருடாவில், அக்கரை, வளலாய், மயிலியதனை, சிதம்பரா கல்லூரி, பாலாவோடை இணுவில், டச்சு வீதி, உடுவில், சங்கு வேலி, மருதனார்மடம் ஒருபகுதி, சுன்னாகம் இலங்கை வங்கி பிரதே சம், அம்பலவாணர் வீதி, யாழ் பல் கலைகழக நுண்கலைப்பீட பிரதே சம், புலோப்பளை, அல்லிப்பளை, ஆக் வீதி உடுவில், சுன்னாகம் ஒரு பகுதி, மக்கள் வங்கி சுன்னாகம், கொத்தியாவத்தை, கந்தையாஉபாத்தி யார் வீதி, ஜெட்மோட்டர்ஸ், மல்லாகம், ஏழாலை, அலுக்கை, பன்னாலை, அளவெட்டி, அம்பனை, தெல்லிப் பளை, துர்க்காபுரம், கார்கில்ஸ் சுன் னாகம், மல்லாகம் நீதி மன்றம், கந்த ரோடை, பிப்பிலி, கட்டுடை, சீரணி, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, பெரு மாள்கடவை, துணைவி, சங்கானை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு, விளிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ளவேம்பிடி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்புகோளபட் டினம், குசுமந்துறை, காட்டுபுலம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

பூந்தோட்டம் கிராமத்திலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

மணல்குளம், இலந்தைமோட்டை, சூரியகட்டைக் காடு, ஆகிய பிரதே சங்களிலும், மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

## ஒரு வீதி விபத்திற்காக அரசுக்கு 10 லட்சம் ரூபா செலவிடநேர்கின்றது

நாட்டில் இடம்பெறும் ஒரு வீதி விபத்திற்காக அரசுக்கு 10 லட்சம் ரூபா செலவிட நேர்கின்றது என வாகன மற்றும் போக்குவரத்துப் பிரிவின் பிராந்தியப் பாதுகாப்புப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் நாளொன்றுக்கு வீதி விபத்தின் காரணமாக 8 பேரள வில் மரணிக்கின்றனர். அத்துடன், 20 பேர் வரை காயமடைகின்றனர். 100 முதல் 105 வரை விபத்துகள் பதிவாகின்றன.

இந்த வீதி விபத்திற்காகச் செல்லும் பொலிஸ் அதிகாரிக்கும், நீதிமன்றச் சட்ட வைத்திய அதிகாரிக்கும், நீதிம ன்ற நடவடிக்கைகளுக்கும் எனப் பணம் செலவாகின்றது.

வீதி விபத்து தொடர்பான ஒரு வழக்கு 5 வருடங்களுக்கு நீடிக்கின் றது. ஒரு நாளைக்கு 8 பேர் எனின், வருடமொன்றுக்கு 3000 பேரளவில் வீதி விபத்துகளினால் மரணிக்கின்ற னர் என அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார்.

## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் குருமாற்றத்திற்கான பூஜை!

கொழும்பு – கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆல யத்தில் குருமாற்றத்திற்கான விடே பூஜை இடம்பெற்றுள்ளது.

பெருந்திரளான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் இந்தப் பூஜை நேற்றுக் காலை வெகு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, தட்சனாமூர்த் திக்கு விசேட பூஜை நடத்தப் பட்டுள் ளது. நேற்று முன்தினம் குருமாற்றம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# கச்சான், மிளகாய், மாம்பழத்துக்கு யாழில் இரண்டு உற்பத்தி வலயங்கள்!

யாழ். பிரதேசத்தில் நிலக்கடலை(கச்சான்), மிளகாய் ,மாம்பழ உற்பத்திக்காக இரண்டுவலயங்கள் அமைப்பதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வுகள் நேற்று கணேசபுரம் பிரதேசத்தில் இடம்பெற்றது. தற்பொழுது நாட்டில் நிலக்கடலை மற்றும் உழுந்து உற்பத்தி நாட்டின் தேவைக்கு போதுமானதாக அமையவில்லை. இந்தியாவிலிருந்து நிலக்கடலையும் உழுந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

கடந்த 2017ஆம் ஆண்டு நாட்டில் நிலக்கடலையை இறக்குமதி செய்வதற்காக 689 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று உழுந்த இறக்குமதிக்காக இதே காலப்பகுதியில் 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

13 ஆயிரத்து 200 மெற்றிக்தொன் உழுந்து இறக்குமதிக்காக இந்த பணம் செலவிடப்பட்டுள்ளது. நாட்டிற்கு தேவையான உழுந்தின் அளவு 20ஆயிரம் மெற்றிக்தொன் ஆகும்.

# தினசரி ராசி பலன் (05.10.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதி 20 ஆம் நாள் சனிக்கிழமை. துவாதசித் திதி மாலை 4.40 வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம் மகம் மாலை 5.10 வரை. பின்னர் பூரம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 08.59 மணி முதல் 10.28 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 3.03 மணி முதல் 4.33 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - புரட்டாதி மாத தேய்பிறை துவாதசி. இன்று பிரதோஷ விரதம்.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - மகம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரத்தில் ஆடைஅலங்காரப்பொருளால்ஆதாயம்கிட்டும்.இதுவரைபகையாய் இருந்த குடும்ப உறவு அன்புடையதாய் இருக்கும்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். எண்ணிய காரியங்கள் நிறைவேறாமற்போகும். பிள்ளைகள் சொல் கேளாமல் தன் இச்சைப்படி நடந்து கொள்வார்கள்.

**மிதுனம்** சமபலன் காணப்படுகின்றது. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்று. பயணத்தின் போது அவதானம் தேவை. வியாபாரத் தொழிலில் சமலாபம் கிடைக்கும்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். தொழில் உயர்வுகள் கிடைக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். விடுபட்டு போனஉறவுகள்மீண்டும்ஒன்றுசேரும்வாய்ப்புண்டாகும்.

**சிம்மம்** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புகழுங்கும். குடும்ப ஒற்றுமை உயர்வடையும். சமூக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். உத்தியோக உயர்வுகள் தானாகவே வந்து சேரும்.

**கன்னி** சஞ்சலமான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் குழப்பநிலை அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். தொழிலில் வெறுப்பும், மனவிரக்தியும் உண்டாகும்.

**துலாம்** அதிஷ்டமானநாள். தனலாபம். குடும்பத்தில்அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரர்களால் ஆதாயம் கிடைக்கும். பூர்வீக சொத்து வழக்குகள் சுமுகமாக தீர்ந்து கைக்கு வந்துசேரும். மாணவர்களுக்குஅரசினால்உதவிகிடைக்கும்

**விருச்சிகம்** சமபலன் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இரக்கமுமாக இருக்கும். எண்ணிய காரியம் தாமதமாகும். வியாபாரம்லாபமும்நட்டமாகநடக்கும். மாணவர்கள் கல்வியில் சுமாரான முன்னேற்றமடைவார்கள்.

**தனுசு** மேன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பஒற்றுமைபலப்படும். தொழில் எத்தனை போட்டிகள் வந்தாலும் அதனை ஜெயித்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் திறமைகள் வெளிப்படும்.

**மகரம்** குழப்பமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். உடல் நிலை பாதிப்புறும். மன அமைதி குன்றும். தொழிலில் நிறையப் பாடுபட வேண்டி வரும். வீண்அலைச்சல்களால்உடலில்சோர்வுஉண்டாகும்.

**கும்பம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். வியாபாரத் தொழில் விருத்தி அடையும். அரசியல்வாதிகள் மதிப்பு, மரியாதை உயரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமடைவார்கள்.

**மீனம்** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் மிகுந்து சுபீட்சம் உண்டாகும். ஆடை, அணிகலன்கள் சேரும். வீட்டில் சுப காரியம் நடக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**சந்திராஷ்டம நாள்: உத்தராடம் 2 ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1 ஆம், 2 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# ஆசிரியர் தினத்துக்காக மாணவர்களிடமிருந்து சில பாடசாலைகளில் பெருந்தொகையான பணம் அறவிடப்படுகிறது என பெற்றோர் புகார்!

ஆசிரியர் தினம் என்ற போர்வையில் மாணவர்களிடமிருந்து சில பாடசாலைகளில் பெருந்தொகையான பணம் அறவிடப்படுகிறது என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்ல ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள், ஆனால் மிக கூடிய நிதித்தொகையில் அன்பளிப்பை வழங்க வேண்டும், விருந்தை வழங்க வேண்டும் என்று சில பாடசாலைகள் உத்தரவிட்டிருக்கின்றமை குறித்து பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர் தினத்திற்கென ஒரு மாணவனிடமிருந்து 1000 ரூபாவுக்கு மேலாக அறவிட்டுள்ள பல பாடசாலைகள் உள்ளன.

வசதி குறைந்த பெற்றோர்களின் நிலை என்னவென்று இந்த நிர்வாகங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எத்தனையோ பாடசாலைகள் ரியூஷன் வகுப்புகளில் அதே ஆசிரியரிடம் தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நிலவுகிறது. மேலும் இன்று புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும்.

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களும் இதேபோன்று பணம் செலுத்தி கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருந்தொகை பரிசும் விருந்தும் வழங்க வேண்டிய கட்டாயத்தை நிர்வாகம் ஏற்படுத்துகின்றது.

பிரத்தியேக வகுப்பில் மாதமொன்றுக்கு ஒரு மாணவனுக்கு 1000ரூபா வீதம் அறிவிட்ட ஆசிரியர்களும் உள்ளனர்.

பாடசாலையில் கற்பித்த ஆசிரியரா? ரியூஷனில் கற்பித்த ஆசிரியரா? வெற்றிக்கு உரிமைகோருவதென்பதிலும் முரண்பாடு.

புலமைப்பரிசில் கூடுதலாக சித்தியடைந்துவிட்டால் அந்த பாடசாலையும் உரிமை கோருகின்ற அதேவேளை ரியூட்டரிகளும் அதற்கு உரிமைகோருகின்றன; பதாகைகள் பறக்கின்றன.

அந்த மாணவனைப் பற்றியோ, பெற்றோரைப் பற்றியோ யாரும் சிந்திப்பதில்லை. அந்த மாணவன் எடுத்த முயற்சியும் பயிற்சியும் என்பதை அத்தருணத்தில் இவர்கள் மறந்துவிடுகின்றார்கள்.

பெற்றோராக மனமுவந்து ஏதாவது வழங்குவதென்பது த விர்க்க முடியாதது. ஆனால் ஆயிரக்கணக்கில் அறவிட்டு தங்கமாலை, தங்கக்காப்பு வழங்குவதென்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

இதிலுள்ள சிறப்பு என்னவென்றால் சுற்றுநிருபத்தை அமுல்படுத்த வேண்டிய அதிபர்கள், கல்வி அதிகாரிகளுக்கு முன்னிலையிலேயே இதனை வழங்குவது. அவர்களுக்கும் ஒரு பொன்னாடை. இந்தக் கலாசாரம் தொடர்கிறது.

பாடசாலைகளில் நிதி அறிவிடுவதும், புலமைப்பரிசில் சித்திபெற்றவர்களின் படங்கள் காட்சிப்படுத்துவதும் கூடாது என்று கல்வியமைச்சின் சுற்றுநிருபங்கள் கூறுகின்றன.

ஆனால், அவை வெறும் சுற்றுநிருபங்களாக மட்டுமே இருக்கின்றனவே தவிர, நடைமுறையில் இல்லை என்பது பெரும்பாலானோரின் குற்றச்சாட்டாகும்.

கல்வியமைச்சு இந்த விடயத்திலும் தலையிட்டு ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும்.

இலவசக்கல்வி என்று கூறிவிட்டு இவ்வாறான தவறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது கண்டும் காணாமலிருப்பது எதிர்காலத்தில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தலாம் எனப் பெற்றோர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

(கு)

# வான் மரத்துடன் மோதி ஏழு பேர் படுகாயம்!

## பெரியகல்லாறில் சம்பவம்



மட்டக்களப்பு, ஒக். 06

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதி பெரியகல்லாறு பிரதேசத்தில் வான் ஒன்று நேற்றுமுன்தினம் நள்ளிரவு வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் படுகாயமடைந்த நிலையில், கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வான் கொழும்பிலிருந்து கல்முனைக்கு பயணித்த போது களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பெரிய கல்லாற்றுப் பகுதியில் நள்ளிரவு 2 மணியளவில் வேககட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது .

இதில் பயணித்த கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த 7 பேர்படுகாயமடைந்தனர். அவர்களுக்கு கல்முனை ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடிப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு மேற்கொண்டு வருகின்றனர்

# சினிமாத் துறையை அரசு முன்னேற்ற நடவடிக்கை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 06

திரைப்படத் துறையையும் கலைஞர்களையும் பாதுகாப்பதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள அரசு ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை எனவும் அத்துறை சார்ந்த சகலரது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கருத்திற்கொண்டு சினிமாத்துறையின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திரைப்படத்துறையினர் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரைப்பட விநியோக நடவடிக்கைகள் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

# இளம் தலைமுறைக்கு என கல்விக்காக புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது பற்றி கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்!

## சிறார் உளவியல் நிபுணர் வலியுறுத்தல்



கொழும்பு, ஒக். 06

இணைய துஷ்பிரயோகமும், இணையத்திற்கு அடிமையாதலும் போதைப் பொருள் துஷ்பியோகத்திற்குச் சமமான பாதக விளைவுகளை ஏற்படுத்திக்கூடியன என்று றிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் உளவியல் நிபுணர் டொக்டர் அபேக்ஷா ஹேவாகீகன தெரிவித்தார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி உலக உளவியல் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செயலமர்வில் உரையாற்றிய அவர், இலத்திரனியல் ஊடகங்கள், இணையம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளுக்கு அப்பால் இளம் சமூகத்தில் கூடுதலான தீமைகள் ஏற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது எனக் கூறினார்.

இளம் தலைமுறை மத்தியில் கல்விக்காக புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்துவது பற்றி கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகும். தமது நாளாந்த செயற்பாடுகளை பாதிக்கும் வகையில் இணையத்தையோ? முகநூலையோ, திறன்பேசிகளையோ பயன்படுத்துதல் அடிமைத்தனமாகும்.

இரண்டு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு இலத்திரனியல் ஊடகக் கருவிகளையோ, திறன்பேசிகளையோ பயன்படுத்த இடமளிக்கக்கூடாது.

அதீத இணையப் பாவனை மூலம் மன அழுத்தம் பார்வைக் கோளாறுகள், செயற்றிறனில் வீழ்ச்சி, தூக்கமின்மை, முள்ளந்தண்டு நலிவடைதல் முதலான தீய விளைவுகள் ஏற்படுகின்றன என உளவியல் நிபுணர் டாக்டர் அபேக்ஷா ஹேவாகீகன மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்த பொலிஸார்!

வீதியில் அநாகரீகமான முறையில் நடந்துகொண்டவர் எனக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மத்துகம நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

தெபுவான பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதாகக் கூறி தன்னால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விடுதலை செய்தமைக்கு எதிராக இந்த பொலிஸ் உத்தியோகத்தர் தெபுவான சந்தியில் வைத்து தனது உத்தியோகபூர்வ துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக் கொள்வார் என அச்சுறுத்தி எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தார்.

இதனையடுத்து சுமார் இரண்டு மணித்தியால போராட்டத்தின் பின் விடே அதிரடிப்படையினரால் இந்



தப் பொலிஸ் உத்தியோகத்தர் மடக்கிப் பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

மணல் அகழ்வு தொடர்பில் கைது செய்யப்பட்டவரிடம் சட்ட ரீதியான அனுமதிப்பத்திரம் இருந்ததால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவரை விடுவித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீதியில் அநாகரீகமான முறையில் நடந்துகொண்டதல் இந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள் ளார் என சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரோபோ தொழில்நுட்பத்துடன் கூடிய களஞ்சியசாலை இங்கும் அமையும்

### நோர்வேயில் நேரில் பார்வையிட்டார் பிரதமர்



நோர்வே நாட்டுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒஸ்லோ நகர எக்ஸ் எக்ஸ் எல் (XXL) களஞ்சிய வளாகத்தில் ரோபோ தொழிநுட்பம் மூலம் செயற்படுத்தப்படும் களஞ்சிய நடவடிக்கைகளை நேற்றுமுன் தினம் பார்வையிட்டார்.

எலிமன்ட் லொஜிக்ஸ் (Element Logics) மற்றும் டிக்ரி (TIQRI) ஆகிய தொழிநுட்ப நிறுவனங்களின் வழிகாட்டலுடன் இந்த ரோபோ தொழிநுட்பச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றமையுடன், இதனூடாக மிகவும் விரைவாகவும் வினைத்திறன் மிக்க வகையிலும் களஞ்சியப்படுத்துவதற்கும் அவற்றைப் பொதியிட்டு மீண்டும் கப்பலேற்றுவதற்கு மான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ஆடைகள், ஏனைய தயாரிப்புகள், மீன்கள், மரக்கறிகள், பழங்கள் என்பவற்றையும் இவ்வாறு களஞ்சியப்படுத்தவும், பொதியிடவும் முடியும் என இதன்போது எடுத்துக் காட்டப்பட்டது.

மீன்பிடித்துறையின் அபிவிருத்திக்கு இவ்வாறான களஞ்சியங்களை நிறுவுவது தொடர்பாக ஏற்கனவே அடிப்படைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும், இந்த நிறுவனங்களுடன் இணைந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கையிலும் இவ்வாறான ரோபோ தொழிநுட்பத்துடன் கூடிய களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்கான பின்புலம் உருவாகியுள்ளதாகவும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் விஜித் விஜயமுனி செய்சா சுட்டிக் காட்டினார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் துணைவியார், பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, ஹோ விதானகே உட்பட இலங்கைப் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

## பெண்ணைச் சுட்டுக் கொன்ற சந்தேக நபர் பொலிஸ் வலையில்

ஜாஎல, வெலிகம்பிட்டிய பகுதியில் பெண்ணொருவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு கொலை செய்தமை தொடர்பில் ஒருவரை சந்தேகத்தின் பேரில் தங்கள் கைதுசெய்துள்ளார்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காரொன்றில் பயணித்த 40 வயதான பெண் மீது மற்றுமோர் காரில் வந்த இனந்தெரியாத நபரினால் இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

பின்னர் படுகாயமடைந்த பெண் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வந்த பேலியகொட குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினர், அத்துருகிரிய பகுதியில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது மோசடி சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவர் 28 வயதுடைய பாதாள உலக குழுவின் உறுப்பினர் எனவும், அவர் கொலைச் சம்பவத்துக்கு பயன்படுத்திய காரையும் பேலியகொட குற்றத்தடுப்பு விசாரணை பிரிவினர் மீட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது.

## சர்வதேச சுற்றுலா ஆராய்ச்சி மாநாடு கொழும்பில் பூர்த்தி



சர்வதேச சுற்றுலா ஆராய்ச்சி மாநாடு மற்றும் சுற்றுலா தலைவர்கள் மாநாடு கொழும்பு பல்கலைக்கழக சுற்றுலாத் துறை கலாநிதி சுரங்க சில்வா தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து நடைபெற்றுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த நிகழ்வு இரண்டு நாள்கள் இடம்பெற்றது.

கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி விமலரத்ன தேரர் இந்த நிகழ்வில் உரையாற்றுகையில், இலங்கை ஓர் சிறிய நாடு, மாங்கனியை போன்ற வடிவை கொண்டது, அதேபோல் சுவையும் கொண்டதால் சுற்றுலாத்துறையினர் இலங்கைக்கு வருகின்றனர் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய ஹொங் கொங் நாட்டை சேர்ந்த சுற்றுலா பொருளாதாரம் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ பேராசிரியர் கலாநிதி பிறைன் கிங் – இலங்கை ஓர் அழகான நாடு, இதனை கண்டுகளிப்பதற்காகவே சுற்றுலாத் துறையினர் இங்கு வருகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் அமெரிக்கா,லண்டன்,சீனா, ஜப்பான்,கொரியா போத்துக்கல்,இந்தியா, பங்களாதேஷ், இந்தோனேசியா , தாய்வான், நெதர்லாந்து, ஆஸ்திரேலியா,கொங்கொங் போன்ற நாடுகளைச்சேர்ந்த துதூவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## பிறப்புச் சான்றிதழ் உடன் இனிக் கொழும்பில் பெறலாம்

நாட்டின் எந்தப் பகுதியிலும் பிறந்தவர்களுக்கு பிறப்புச் சான்றிதழை பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளுவதற்கான வசதி செய்யப்பட்டுளளது.

இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டு கடந்த 12 நாள்களுக்குள் மாத்திரம் 4 ஆயிரத்து 200இற்கும் அதிகமான பிறப்புச் சன்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் இருந்தும் பிறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## கட்டுநாயக்கவில் தரையிறங்கவிருந்த விமானம் மத்தளைக்கு அனுப்பிவைப்பு!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவிருந்த விமானமொன்று மத்தள சர்வதேச விமான நிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.50 மணிக்கு தரையிறங்கவிருந்த Air China CA 424 எனும் விமானமே காலநிலை சீரின்மை காரணமாக இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

எனினும், நேற்று அதிகாலை 01.08 மணிக்கு மீண்டும் இந்த விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**இன்றைய தினம் சர்வதேச ஆசிரியர் தினமாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

- கே.எஸ். சிவஞானராஜா -



# "முத்து முத்தான மோகன ஓவியங்கள் வித்தகமாய்ப் பேசிட விதி சமைப்போம்"

**"குருப் பிரம்மா, குரு விஷ்ணு**
**குரு தேவா, மகேஸ்வர ஹா**
**குரு ஷாட்ஷாத், பரப்பிரம்மா**
**தஸ்மை ஶ்ரீ, குரவே நமஹா"**

ஆண்டவனுக்கு அடுத்தபடியாக போற்றி வாழ்த்தப்படுகின்ற பிரம்மாக்கள் ஆசியர்களேயாவர். அறிவிலும், ஆற்றலிலும், திறனிலும், தேர்ச்சியிலும், வாசிப்பிலும், நேசிப்பாலும், ஒழுக்கத்திலும் ஒப்புரவிலும் உயர்ந்து நிற்பவர்கள் ஆசிரியர்களே.

ஒவ்வொரு மாணவருக்கும் ஆசானாக இருந்து அகரத்தில் வழியாக வாழ்வினை சிகரமாக்குபவன் ஆசிரியனே.

கற்றவழியின்பால் மாணவர்களை நிற்கச் செய்யும் பணியினை அற்புதமாகக்குபவன் ஆசிரியனே!

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

சீடர்கள் எவராயினும் அவர்கள் பழுதறக் கற்பதற்கும், பின்னர் கற்றபடி ஒழுகுவதற்கும் குருவாக அமைபவர் உரியவாறு முன்மாதியாகத் தெய்வம் போலப் போதனை புரிய வேண்டும்.

குருவானவர் ஒரு காலத்தில் சட்டம்பியராக இருந்து ஒரு கிராமத்தையே நிர்வாகம் செய்து வென்றிருக்கிறார்கள். காரணம் ஓர் ஆசிரியர் ஆனவர் பன்மொழி ஆற்றலும், கணிதம் சோதிடம், சட்டம், சம்பிரதாயம், நடை, உடை, பாவனை மற்றும் நல்லொழுக்கம், ஆசார சீலம் ஆகிய அனைத்திலும் வல்லவராகவும், நல்லவராகவும், பண்பானவராகவும், சமய விழுமியம் காப்பவராகவும் வாழ்ந்து வரமும் வாக்கும் தந்திருக்கிறார்கள்.

அல்லாமலும் அத்தகு ஆசிரியர்களுடைய உடலும் உள்ளமும் அறிவினாலும், அறிவுச் செறிவினாலும் நிரம்பி வழிந்து சமூகத்தில் சுவறிக் கொண்டன.

மேலும் தான் வளர்வதற்குப் பதிலாக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளைக் கோபுரமாக்கியவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்களாலேயே இந்த உலகம் உயிரோடு வாழ்கிறது. இப்போது குறிக்கப்பட்ட தொகையினர் மாணவர்களைப் பெருங் கல்வியாளர்களாக மாற்றுவதில் வெற்றி கண்டு வருகிறார்கள். இதன் பிரகாரம் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகள், தலைவர்கள், நற்பிரஜைகள் உருவாகி நாட்டுக்கு வரம் தருகிறார்கள். ஆசிரியத் தெய்வங்கள் ஒவ்வொரு பாடசலைகயிலும் உள்ளனர்.

ஒரிரு ஆசிரியர்களாலும், ஆசான்களாலும் மாணவர்கள் – குறிப்பாக மாணவிகள் – பாதிக்கப்படுகின்ற கொடூர நிலைமைகள் கண்டு இந்த மண்ணும், பெற்றோர்களும் கண்ணீர் சொரிகின்றனர். இதனால் ஆசிரியம் ஒவ்வொரு நபர்களினாலும் அவதானிக்கப்பட்டு வருகிறது. சமூகம் விழிப்படைந்துள்ளது. அதைவிட மேலாக, நாட்டப் பெற்ற சிலைகள் கூட இனிமேல் கண்ணீர் விடலாம். ஊடகச் செய்திகளைப் பார்க்கும்போது பெற்றோர்கள் திடுக்கிட்டு நீதிமன்றை நாடுகின்ற நிலை இன்னும் ஓய்ந்த பாடில்லை.

மிக அண்மையில் மாணவர்களே கொதித்தெழுந்து அறிக்கை விட்டிருக்கின்றார்கள்.

காப்பாற்றச்சிலபேர் இருந்து விட்டால் காமுகர் வாழ்விலும் நியாயமுண்டு என்பது இந்த மண்ணின் தாற்பரியமாகி விட்டது. கல்விப் புலமும், கண்காணிப்புத் தலைமைகளும் இது உண்மைதானா என்பதை ஆராயாமல் இருப்பதும், அவர்களோடு மீண்டும் சகவாசம் செய்து சந்தோஷிப்பதும், விருந்தினராக்குவதும் ஒரு பண்பாடாக மாறிவிட்டதே என்று மாணவர்கள் கொதித்துக் கொடிகாட்டுவது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிந்தும் திரும்பத் திரும்ப மாணவ மணிகளோடு தொட்டுப் பழகுவதும், பட்டுப் பழகுவதும், படாமல் பழகுவதும் தொடாமா பழகுவதும், கண்காளல் அளைவதும் இந்த மண்ணின் தலைவிதியோ?

**முதலைகள் தப்பிவிட்டன**
**மூஞ்சூறுகள் சிக்கி விட்டன**
**ரிஷி மூலம் ஆராயதே**
**நதி மூலம் ஆராயாதே** - என்று முன்னோர் கூறிய வாக்குச் சரிதானா?

மேற்படி திருவிளையாடல்கள் நடைபெற்றனவோ, இல்லையோ இக்குற்றச்சாட்டு எல்லோருக்கும் பொருந்தாது. பத்தாயிரம் பேருக்குப் பத்துப் பேர் என்று புள்ளி விவரம் குறிப்பிடுவதானால், நீங்கள் இதில் சம்பந்தப்படவேயில்லை என்ற வகையில் நீங்கள் எமது தெய்வங்களே என நாம் தலைவணங்குகின்றோம்.

மகாபாரதம், இராமாயணம் ஆகிய காப்பியங்களில் குருவின் போதனைகளை மீறாமல் அரசாண்ட அரசர்கள் இன்றும் நம் நெஞ்சங்களில் வாழ்கிறார்கள். இறுதி யுத்தத்தின் போது, தடுமாறித் தளர்ந்து போய் நின்ற அருச்சுனனுக்குக் கண்ணபிரான் குருவாக அமைகின்றார்.

> **"**
> **பேனாவும், வெண்கட்டியும், நேரமும் பொழுதும் செலவழிக்காமல் சொகுசாக நோகாமல் கொள்ளாமல் ஓர் ஆசிரியன் பாடசாலையில் கடமைபுரிவாராயின் அவரை இறைவனும், சமூகமும், இயற்கையும் கவனித்துக் கொள்ளும்.**

**கடமை**

"கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே" இந்த வாக்கியமே ஒவ்வொரு ஆசிரியரிடமும் கூட இருந்து எல்லோரையும் வாழ்விக்கின்றது.

ஏழரை மணிக்கு ஆரம்பிக்கும் பாடசாலையில் ஏழு மணிக்கே பிள்ளைகள் சமுகமளித்து விடுகிறார்கள். ஆனால் ஆசிரியர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் அரும்பொருட்டு நேரத்திலேயே 'அவக் அவக்' என்று ஓடி வருகிறார்கள். அந்த இடைவெளி நேரத்தில் மாணவர்களிடையே விளையாட்டுக்கள், மோதல்கள், தப்புக்கள், தவறுகள் நடைபெற வாய்ப்புக்கள் உள்ளன. பருவக் கோளாறு உள்ளவர்கள் இச் சந்தர்ப்பத்தில் தம்மைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள். இந்த நிலை மாற்றப்படும் பட்சத்தில் பாரிய அனுகூலத்தை நிலைநாட்டலாம். ஆசிரியர்கள் கால நேர ஒழுங்கின்படி ஏழு மணிக்கே முன்வரவுக்கு வழி சமைக்கலாம்.

பேனாவும், வெண்கட்டியும், நேரமும் பொழுதும் செலவழிக்காமல் சொகுசாக நோகாமல் கொள்ளாமல் ஓர் ஆசிரியன் பாடசாலையில் கடமைபுரிவாராயின் அவரை இறைவனும், சமூகமும், இயற்கையும் கவனித்துக் கொள்ளும்.

**முன்மாதிரி**

ஓர் அதிபர் எப்படிக் கடமை ஆற்ற வேண்டும் என்பதையும், ஓர் ஆசிரியர் எப்படிக் கடமையாற்றவேண்டும் என்பதையும் ஓர் ஆசிரியர் எது, எவற்றில் தகைமையுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும், எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் ஆசிரியன் ஒழுக்க விழுமியத்தை எப்படிப் பேணவேண்டும் என்பதையும், ஓர் ஆசிரியரின் உடை, நடை, பாவனைஎப்படிஅமையவேண்டும் என்பதையும் ஒருங்கே அமையப் பெற்ற ஓர் ஆசான் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாற்பது ஆண்டு காலம் பேராசானாய் விளங்கிய வைசர் சிவசுப்பிரமணியம் அவர்கள் தான்.


அவர் காலை ஏழுமணிக்கு பாடசாலையில் சமுகமளித்திருப்பார். மாலை ஐந்து மனிக்குத் தான் பாடசாலையை விட்டு வீட்டுக்குப் புறப்படுவார். ஒவ்வொரு நாளும் பத்து மணித்தியாலயங்கள் பாடசாலையிலேயே கடமையில் இருப்பார். ஒரு சமூகம் அவரைத் தெய்வமாகப் போற்றுகிறது. ஆதலால் அவர் ஒரு பதங்கெடாத எம் பெருமான் என்று ஸ்கந்தா சமூகத்தால் வணங்கப்படுகின்றார். வாழ்த்தப்படுகின்றார். அவர் 40 வருட காலத்தில் எந்தவொரு லீவும் எடுக்கவில்லை. ஒரேயொரு நாள், அதுவும் ஒரே ஒரு மணித்தியாலம், அதுவும் அவருடைய பதிவுத் திருமண வைபத்தில் கையெழுத்துப் போடுவதற்காகவே குறுகிய கால லீவு எடுத்துள்ளார்.



ஆசான் என்பவன் பாடசாலையில் ஏனோதானோ என்று கடமை செய்வானாக இருந்ததால், காலம் அவரைத் தண்டித்தே தீரும். போன் கலாசாரமும், விழாக் கலாசாரமும், திருவிழாக் கலாசாரமும், உடை நடை நாகரீகக் கலாசாரமும் மேலலோங்குமாக இருந்தால் பிள்ளைகள் தான் பாவம் செய்தவர்களாகி விடுவர். தலைவிதி அப்படி.

தயவு செய்து அழகாக எழுத, பேச, வாசிக்க, தலைமை தாங்க, கடிதம் எழுத, கண்டு பிக்க, விஞ்ஞான கணித மேதையாக மிளிரவும் இன்னும் ஒரு படி மேலே உயர்ந்து ஆங்கில அறிவுக்கும், தொழில் நுட்ப மேலாதிக்கத்திற்கும் வழிகாட்டுவீர்களாக இருந்தால் ஆசிரியர்கள் சிரம் தாழ்த்தி வணங்கப்படுவார்கள். தொண்ணூறு வீதமானவர்கள் தெய்வங்களாக எம்மால் கரம் கூப்பப்படுகி றார்கள். *





# குருபெயர்ச்சிப் பலன்கள்

## 04.10.2018 முதல் 28.10.2019 வரை

**விளம்பி வருட குருப்பெயர்ச்சி நேற்றுமுன்தினம் 4 ஆம் திகதி இரவு 10.05 மணிக்கு இடம்பெற்றது. குருபகவான் துலா இராசியிலிருந்து விருச்சிக இராசிக்கு மாறுகிறார். பன்னிரண்டு இராசிக்காரர்களுக்குமான பலன்கள் தொடர்ந்து வெளியாகும்.**



## சிம்மம்

**(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)**

**கிரகநிலை:**
ஒக்டோபர் - 04 - 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுகஸ்தானத்திற்கு மாறினார்.

**பலன்:**
திருமணத்தடை, குடும்பப் பிரச்சினை, பணப் பிரச்சினை போன்றவற்றில் சிக்கித் தவித்த சிம்ம ராசி அன்பர்களே, இந்த குரு பெயர்ச்சியால் குரு உங்களின் அஷ்டம ஸ்தானத்தையும், தொழில் மற்றும் விரய ஸ்தானத்தையும் பார்க்கிறார். உங்கள் ராசிக்கு நான்காம் இடத்திற்கு குரு பகவான் வருகிறார். உங்களின் சுகாதிபதியான செவ்வாய் வீட்டில் குரு பகவான் சஞ்சரிக்க இருப்பதால் உங்களைப் புரிந்து கொள்ளாமல் ஏற்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் தெளிவாகும். இதனால் மற்றவர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள்.

குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள், கணவன் - மனைவியிடையே சரியான புரிதல் இல்லாமை போன்ற பிரச்சினைகளை சந்தித்து வருகிறீர்கள். இவை அனைத்தும் இந்த குரு பெயர்ச்சிக்குப் பிறகு மாறும். உங்களுக்கு குடும்பத்தில் ஏற்பட்ட அவமானங்கள் மாறும். மனதில் நிம்மதி பிறக்கும். இதனால் நிம்மதியான தூக்கம் வரும். கவலை வேண்டாம். உங்கள் வாழ்க்கைத்துணை உங்களைப் புரிந்து நடந்து கொள்வார். தாய், தாய்வழி உறவினர்களிடையே இருந்த பிரச்சினைகள் அகலும்.

தொழில் ஸ்தானமாகிய ரிஷபத்தை குரு பகவான் தனது ஏழாம் பார்வையாக பார்க்கிறார். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். தொழிலில் ஏற்பட்டிருந்த தொய்வுகள் அகலும். நிறைய போராட்டத்திற்குப் பிறகு நல்ல செய்திகள் தொழிலில் கிடைக்கப் பெறுவீர்கள்.

**உத்யோகஸ்தர்களுக்கு -**
தங்கள் உடன் பணி புரிபவர்களிடம் கவனமாகப் பழகவும். மற்றவர்களுக்கு வாக்கு கொடுக்கும் போதும் கவனம் அவசியம். நீங்களே முன் சென்று என்னால் செய்ய முடியும் என்று உறுதி கொடுக்காதீர்கள்.

**பெண்களுக்கு -**
பெண்களைப் பொறுத்த வரை வேலை செய்யும் பெண்கள் லாப மடைவார்கள். வேலை சூழல் உங்களுக்கு ஏற்றதாக அமையும். வேலை செய்யும் இடத்தில் இருந்த சிறு சிறு தொந்தரவுகள் தானாக மறையும்.

**மாணவர்களுக்கு -**
கல்விகாரகன் புதன் பகை ஆனாலும், புதன் வீட்டில் குரு நட்பாவதால் கல்வியில் இருந்த தடைகள் அனைத்தும் நீங்கும். குரு சுயசாரம் பெறுவதால் மேல்படிப்பு படிக்க விரும்புபவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் அமையும்.

**அரசியல்துறையினருக்கு -**
இருந்து வந்த பணக்கஷ்டங்கள் நீங்கும். உங்களின் குடும்ப உறுப்பினர்கள் உங்கள் முடிவுக்கு ஒத்துழைக்காமல் இருந்த நிலை மாறும். உங்களைச் சுற்றி உள்ளவர்களால் உங்களுக்கு ஏற்பட்ட மனவருத்தங்கள் மாறும்.

**கலைத்துறையினருக்கு -**
முக்கியமான காலகட்டம் இது. உங்கள் துறையில் சிறப்பான வரவேற்பை எதிர்பார்க்கலாம். நீண்ட நாள்களாக நீங்கள் விரும்பிய ஒருவரது பாராட்டைப் பெறுவீர்கள்.

**மகம்:**
இந்த குரு பெயர்ச்சியில் சக வியாபாரிகளால் தொந்தரவு ஏற்படும். சேமிப்பிற்கு முயற்சி செய்யுங்கள். ஏனெனில் வருமானம் அதிகமாக வரும். எக்காரணத்தைக் கொண்டும் மற்றவர்களில் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம்.

**பூரம்:**
இந்த குரு பெயர்ச்சியில் தங்களுக்கு உள்ள வேலையை மட்டும் சரியாக செய்யுங்கள். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். அது உங்களுக்கு பெரும் தலைவலியாக அமைந்து விடலாம். பண வியங்களில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள்.

**உத்திரம் 1ம் பாதம்:**
இந்த குரு பெயர்ச்சியில் புதிய வீடு, வாகனம் போன்றவைகளில் அதிக லாபத்தை காணலாம். ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களுக்கும் சரியான பேச்சுவார்த்தைகள் மூலம் லாபம் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். பெரியோர் ஆசி கிட்டும்.

**பரிகாரம்:**
ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவபெருமானுக்கு வில்வம் அர்ப்பணித்து வழிபட வாகனம் சம்பந்தமாக இருக்கும் தடை அகலும்.



## கன்னி

**(உத்திரம் 2, 3, 4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2, பாதங்கள்)**

**கிரகநிலை:**
ஒக்டோபர் - 04 - 2018 அன்று இரவு 10.05 மணிக்கு குரு பகவான் தன வாக்கு ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறினார்.

**பலன்:**
நினைத்ததையெல்லாம் முடிக்க நினைக்கும் கன்னிராசி அன்பர்களே! இப்போது உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்திற்கு குருபகவான் பெயர்ச்சி ஆகிறார். அவர் மூன்றாம் இடத்திலிருந்து உங்களுக்குடையே களத்திர ஸ்தானமாகிய ஏழாம் இடத்தையும், ஒன்பதாம் இடமாகிய பாக்கிய ஸ்தானத்தையும், பதினொராம் இடமாகிய இலாபஸ்தானத்தையும் பார்க்கிறார். குருபெயர்ச்சியால் உங்களுக்கு அதிக அளவில் நன்மைகள் நடைபெறுவதற்கே அதிக வாய்ப்புள்ளது.

குடும்பத்தை பொறுத்தவரை கணவன் - மனைவிக்கிடையே இருந்த பிரச்சினைகள் விலகி இன்பமாக வாழ வழிபிறக்கும். இளைய சகோதரர்களிடையே இருந்த சண்டைகள், பிளவுகள் காணாமல் போகும். தந்தை வழியே வர வேண்டிய சொத்துகள், பிதுர் ராஜ்ஜிய சொத்துகளிலிருந்த பாகப் பிரிவினைகள் எந்தப் பிரச்சினையுமின்றி தீரும். வழக்குகள் ஏதாவது நடைபெற்றுக் கொண்டிருக்குமாயின் அது இந்தக் குருபெயர்ச்சிக்கு பிறகு உங்களுக்கு சாதகமாகத் தீர்ப்புகள் வரும்.

தொழிலைப் பொறுத்தவரை உங்கள் ராசிக்கு நான்காம் இடத்தில் சனி அமர்ந்து ஏழாம் பார்வையாகத் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால் சற்று மந்தநிலை காணப்பட்டாலும் குரு பாக்கிய ஸ்தானத்தைப் பார்ப்பதால் சில வெற்றிகள் உண்டாகும்.

**உத்தியோகஸ்தர்களுக்கு-**
வீண்பிரச்சினைகள்வந்துபோகும். நம்பிக்கையாக யாரிடமும் எதையும் சொல்ல வேண்டாம். வெளிநாடுகளுக்குச் செல்ல நினைக்கும் அன்பர்கள் இப்போது அதற்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கு-**
திருமண வயதில் உள்ளவர்களுக்கு நல்ல இடத்திலிருந்து வரன்கள் அமையப் பெறுவீர்கள். பெற்றோர் உங்களுக்கு பார்த்து பார்த்து செய்வார்கள். கணவரிடம் அன்யோன்யம் அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு -**
கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். மேற்படிப்பில் அக்கறையுடன் படித்தால் மட்டுமே நல்ல வேலை எதிர்காலத்தில் அமையும். ஆசிரியர்கள் உங்களைச் சிறப்பாக வழி நடத்துவார்கள்.

**அரசியல் துறையினருக்கு -**
முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு ஆயத்தமாவீர்கள். சிலரது காரியங்களுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஆனால் கட்சியில் மிகப் பெரிய பதவிஉயர்வு கிடைக்கும்.

**கலைத்துறையினருக்கு -**
விருதுகள், பாராட்டுகள் கிடைக்கப் பெறுவீர்கள். நீண்ட நாளைய கனவுகள் பலிக்கும். கிடைக்கக் கூடிய விருதுகள் வெளிநாடுகளுக்கு சென்றுவருவது போல் அமையும். தந்தை வழியாக வாய்ப்புகள் வந்து குவியும்.

**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வீர்கள். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்கள் பேச்சில் நிதானத்துடன் நடந்து கொள்ளுங்கள். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**அத்தம்:**
இந்த குரு பெயர்ச்சியில் அனைவரிடமும் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குழப்பத்தின் காரணமாக முடிவுகள் தவறாக அமைந்து விடலாம். ஆதலால் உங்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவரை துணைக்கு வைத்துக் கொள்வது மிகவும் உத்தமம்.

**சித்திரை 1, 2, பாதங்கள்:**
இந்த குரு பெயர்ச்சியில் சிலருக்கு உடல்நிலை குறைவு ஏற்பட வாய்ப்புண்டு. தக்க நேரத்தில் உணவு அருந்த முடியாமல் அதனால் வயிற்று உபாதைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். வியாபாரிகளுக்கு மனக்குழப்பங்கள் ஏற்படக் கூடும்.

**பரிகாரம்:**
புதன்கிழமை தோறும் விஷ்ணுவிற்கு மல்லிகை மலர் அர்ப்பணித்து வணங்க சகோதரர்களிடம் இருக்கும் மனசங்கடங்கள் தீரும்.

காலைக்கதிர் Kalaikkathir



# நல்லாட்சியில் கிடைத்த விடுதலையும் கிடைக்காத விடுதலையும்

விவேகானந்தனூர் (சதீஸ்)



கடந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் போதான பழிதீர்ப்புப் படலத்தின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனைக்குள்ளாகியிருந்த சில பிரபலங்கள் நல்லாட்சியில் நிரபராதிகளாக் கப்பட்டனர். அவர்களில் முதன்மையானவர்களாக முன்னால் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண அவர்களும் காணப்படுகிறார்கள்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இலங்கை நீதித்துறை மீது பலரும் விரல் நீட்டி விமர்சித்துள்ளார்கள். சுயாதீனமாக செயற்பட வேணடிய நீதித்துறைக்குள் அத்துமீறிய அரசியல் தலையீடு செலுத்தப்பட்டதே அதற்கு காரணமாகும்.

முன்னாள் பிரதமநீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா பதவிக் கதிரையிலிருந்து 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் அவர் தனது சொத்துக்கள், உடைமைகள் குறித்த விவரங்களை முறைப்படி பிரகடனப் படுத்தத் தவறியதாக தெவிக்கப்பட்டது. அதனாலேயே இப்போதைய இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அவருக்கெதிராக நீதிமன்றில் மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது அதுமட்டுமன்றி அன்றைய ஆட்சியில் ஷிராணி பண்டாரநாயக்காவைப் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து பலவந்தமாக அகற்றியிருந்தது மஹிந்த ஆட்சி. எவ்வாறாயினும் ஆட்சி மாற்றத்தின் பின்னர் புதிய அரசாங்கம் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு இழைக்கப்பட்ட அநீதியானது கடந்த அரசாங்கத்தின் ‘திவிநெகு ம’ சட்ட மூலத் தீர்ப்பின் பழிவாங்கல் எனத் தெரிவித்து தனது நூறு நாள் வேலைத் திட்டத்தில் நிவாரணமளித்தது நீக்கப்பட்டிருந்த பிரதம நீதியரசர் பதவி மீளவும் வழங்கப்பட்டு அதிலிருந்து அவர் மறுநாளே உத்தியோகபூர்வமாக ஓய்வு பெற்றுக் கொண்டமையும் புதிய அரசாங்கத்தின் ஏற்பாட்டிலேயே இதற்கு மேலதிகமாக ஷிராணி பண்டாரநாயக்கா மீது தொடரப்பட்டிருந்த இலஞ்ச ஊழல் வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டன.

அதேபோன்று ராஜபக்ஷ அரசாங்கத்தால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடமிருந்து பறிக்கப்பட்ட கௌரவ இராணுவப் பட்டங்கள், விருதுகள், வசதிவாய்ப்புக்கள் அனைத்து நடப்பு அரசாங்கத்தால் மீள வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இலங்கை இராணுவக் கட்டமைப்பின் மீயுயர் அந்தஸ்து மிக்க ‘பீல்ட் மார்ஷல்’ தகுதியினையும் புதிய அரசு வழங்கியது. அவ்வாறே கலாநிதி விக்கரமபாகு கருணாரட்ணவுக்கு கடந்த அரசாங்கத்தால் அரசியல் காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விரிவுரையாளருக்கான நிலுவைக் கொடுப்பனவுகளை மீள வழங்கி முறையான ஓய்வூதியத்தையும் நல்லாட்சி அரசாங்கம் வழங்கியது.



முன்னைய அரசாங்கத்தால் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்ததால் கடந்த காலத்தில் நீதித்துறையின் சுதந்திரமும் நம்பகத்தன்மையும் சீரழிக்கப்பட்டன. தற்போது தான் இலங்கை நீதி நிர்வாகத்துறை சரியான பாதைக்குத் திரும்பியுள்ளது என சர்வதேச அரங்கில் தெரிவித்து வரும் நல்லாட்சி தேசிய அரசாங்கம், கடந்த காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் இன்றுவரை கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை.

விமர்சனங்களுக்குள்ளாகியிருந்த நீதித் துறையினாலும் பதவியிலிருந்தபோது சர்ச்சைகளுக்குள்ளான சில நீதியரசர்கள் காலத்தின் போதும் பலதமிழ் அரசியல் கைதிகளுக்கு பாரிய தண்டனைத் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டமை இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அவசர காலச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டவிதிகளின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்வர்களின் தண்டனைத் தீர்ப்புக்களை புதிய அரசாங்கம் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி அவர்களின் சிறையிருப்புக் காலத்தை கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துள்ள சூழலில் தமிழ் அரசியல் கைதிகளை புதியபொறிமுறையின் மூலம் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் கவுன்ஸில் பரிந்துரைத்துள்ளது.

இதற்கப்பால் ’சிறு பான்மைத் தழிம் இளைஞர்கள் ஆயுத பாதைக்கு சென்றதற்கான பொறுப்புக் கூறலை தமிழ்த்தலைமைகள் மட்டுமின்றி கடந்த காலத்தில் ஒவ்வொரு ஆடசியாளரும் கூட பொறுப்பேற்கவேண்டும். தமிழர்களின் பல நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமையாலேயே அகிம்சை கடந்து அவர்கள் ஆயுத வழியைப் பின்பற்றத் தலைப்பட்டனர்’ என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உட்பட பிரதமர் ரணில் விக்கரமசிங்க, முன்னால் ஜனாதிபதியும் நல்லிணக்கச் செயலணிக்குழுத் தலைவியுமான சந்திரிக்காகுமாரதுங்க போன்றோரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பகிரங்க மேடைகளில் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் தாராளமான நியாயப்பாடுகள் இருக்கின்ற நிலையில்தான், ஜனாதிபதி தன்னை தாக்க முயற்சித்தவர் எனச் சொல்லப்படும் தண்டனைக் கைதியான முன்னால் போராளி ஒருவருக்கு பொது மன்னிப்பளித்து விடுதைலை செய்தார். ஆகவே மீதமிருக்கின்ற நூறுக்கும் குறைவான அரசியல் கைதிகளை விடுதலை செய்யாது நல்லிணக்கம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதன் நோக்கம் எதுவென்று புரியவில்லை.

சில பேரினவாத அரசியல் வியாபாரிகளின் கூக்குரலுக்கு நல்லாட்சி அரசாங்கம் அஞ்சுகிறதா, அல்லது இராணுவத்தினர் மீது விழுந்துள்ள கரும்புள்ளிகளை சமநிலைப்படுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸின் போர்க்குற்ற சங்கடத்திலிருந்து சற்றேனும் தன்னை தற்காத்துக் கொள்ள கைதிகள் விடயத்தைப் பயன்படுத்துவதற்கு எத்தனிக்கிறதா? என எண்ணத் தோணுகிறது.

எது எப்படியோ போர்க்குற்றம் தொடர்பில் இது நாள்வரை அடையாளம் காணப்படாத, கைது செய்யப்படாத இராணுத்ததை காப்பாற்றத் துடிக்கும் நல்லாட்சி தேசிய அரசாங்கமானது நீண்ட நெடுஞ் சிறை வாசத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும்தமிழ்அரசியல் கைதிகளின் விடயத்தை பரிசீலனை நிலைக்கப்பால் நகர்த்தி அவர்களின் துரித விடுதலைக்கு வழிசமைக்கும் பட்சத்திலேயே நல்லாட்சி நாயகர்களின் மேடைப் பேச்சுகள் மேன்மைபெறும் என்பது திண்ணம்.

# சமாதானம், நல்லிணக்கம் ஏற்படுத்துவதில் இலங்கை முழு உலகுக்கும் முன்னுதாரணம்

## நோர்வே வெளிநாட்டமைச்சர் தெரிவிப்பு

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான கடினமான கடமைப் பொறுப்பை சிறப்பாக மேற்கொள்வது தொடர்பாக இலங்கை முழு உலகிற்கும் முன்மாதிரியை வழங்கி வருகிறது என நோர்வே வெளிநாட்டமைச்சர் இனெ எரிக்சன் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ நகர அரச விருந்தினர்களின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தூதுக் குழுவினரைச் சந்தித்த இனெ எரிக்சன், இலங்கையின் சமாதானம் மற்றும் நல்லிணக்கவேலைத்திட்டத்திற்கு நோர்வே நாட்டின் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம் என்று மேலும் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நோர்வே நாடுகளுக்கிடையே பொருளாதார மற்றும் அரசியல் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் மூலோபாயங்கள் தொடர்பாகவும், இதுவரை இரு நாடுகளுக்கிடையிலும் காணப்பட்ட உதவி வழங்கும் எண்ணக்கருவுக்கு அப்பால் இந்தத் தொடர்புகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்து சமுத்திரத்தில் சுதந்திரமான கப்பற் போக்குவரத்து தொடர்பாக இலங்கை மேற்கொள்ளும் முயற்சி குறித்து இதன்போது விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. சமுத்திரம் சார்ந்த நாடுகள் அங்கம் வகிக்கும் பல்வேறு அமைப்புக்கள் மத்தியில் ஒத்துழைப்பு மற்றும் ஒரு நிலைத்தன்மையை உருவாக்குவதன் தேவை தொடர்பாகவும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

கடற்றொழில் வளங்கள் அபிவிருத்தி மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்குப் புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளும்மேற்கொள்ள முடியுமானகூட்டுநடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்த கலந்துரையாடலின்போது வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் நிறுவுதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் குற்றவியல் நீதி தொடர்பான பல்கலைக்கழகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவும் நோர்வே இணக்கம் தெரிவித் துள்ளது.

# வவுனயாவில் இம்முறை பெரும் போகத்தின்போது 16 ஆயிரம் ஏக்கரில் உழுந்து 550 ஏக்கரில் பாரம்பரிய நெல்

## உற்பத்தியாகும் என நேற்றைய நிகழ்வில் தகவல்

வவுனியா மாவட்டத்தில் 2018 பெரும் போகத்தில் 16 ஆயிரம் ஏக்கரில் உழுந்து மற்றும் 550 ஏக்கரில் பாரம்பரிய நெல்லும் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் 16ஆயிரம் ஏக்கரில் உழுந்து செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கமைவாக வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் 16ஆயிரம் ஏக்கரில் உழுந்து உற்பத்திக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான வைபவம் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் கைவிடப்பட்ட 550 நெற்காணியில் பழமைவாய்ந்ததும் போசாக்கு நிறைந்ததுமான நெல் வகைகளை உற்பத்தி செய்வதற்கு விவசாய அமைச்சு, விவசாய அபிவிருத்தி திணைக்களம் , விவசாய திணைக்களம் ஆகியன நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. இதற்கான உரியநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளுக்கு



ஆலோசனை வழங்கியுள்ளார்.

நமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய பலவகையான நெல்கள் முன்னர் இருந்துள்ளன. இவை தற்பொழுது அருகிவருகின்றன. விசேடமாக முத்து சம்பா, மாணிக்கம் சம்பா உள்ளிட்டவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

போசாக்கு நிறைந்த இத்தகைய அரிசி வகைகளுக்கு சந்தையில் கூடுதலான கேள்வி உண்டு. இதன் காரணமாக வவுனியாவில் கைவிடப்பட்ட 650 ஏக்கர் நெற்காணிகளில் சம்பிருதாய நெல் உற்பத்தி இம்முறை பெரும்போகத்தில் மேற்கொள்ளவுள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆசிய, பசுபிக் தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் முனைவு மாநாடு திருகோணமலையில்!

ஆசிய பசுபிக் வலயத்தைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில்முனைவு கல்வி மேம்பாட்டு மாநாடு அடுத்த வாரம் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை திருகோணமலையில் நடைபெறுமென வணிக கைத்தொழில் அமைச்சர் ரிஷாட் பதியுதின் தெரிவித்தார்.

யுனெஸ்கோ அமைப்பும், அப்பீட்நிறுவனமும் இணைந்து தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையுடன் மாநாட்டை ஒழுங்கு செய்கின்றன. இந்த மாநாடு தெற்காசிய நாடொன்றில் நடைபெறும் முதல் சந்தர்ப்பம் இதுவென அமைச்சர் கூறினார்.

அவர் நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த தகவலை அறிவித்தார்.

தொழில் முனைவு கல்வி மேம்பாட்டு மாநாட்டில் 21 நாடுகளைச் சேர்ந்த கல்விமான்களும், தொழில் முயற்சியாளர்களும் அடங்கலாக 80 பேர் வரை பங்கேற்க உள்ளார்கள்.

இவர்களை கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளோம் என தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தஷ்ன போகொல்லாகம தெரிவித்தார்.

மாநாட்டின் நிறைவு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி பிரதமர் ணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

## எதிர்வரும் பட்ஜெட்டுக்கு 26 பெண்களின் ஆலோசனை!

நாட்டின் வர்த்தக மற்றும் பல்வேறு தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள 26 பெண்கள் எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்திற்கான ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற வரவு – செலவுத்திட்டம் தொடர்பான ஆரம்ப நிகழ்வில் இதனை சமர்ப்பித்தனர். அரச தனியார் பங்களிப்புடனனான வேலைத்திட்டமாக இது இடம்பெற்றது.

நாட்டின் பல்வேறு துறையிலுள்ள மற்றும் விசேடமாக பெண்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள பிரச்சனைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

வர்த்தக துறையில் அழுத்தத்தை ஏற்படுத்தும் வரிக் கொள்கை, ஊழியர் பற்றாக்குறை, ஊழியர்களுக்கு கூடுதலான பயன்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறைகள், வங்கித் துறைகள் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

## அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அபிவிருத்திக்கு விசேட திட்டம்!

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிராமிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்கும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் விசேட செயற்திட்ட மொன்றை செயற்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட துறையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அம்பாந்தோட்டை மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கான செயற்திட்டமொன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலின்போது ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## 'இந்து சமுத்திரம் ; எமது எதிர்காலத்தை வரையறுத்தல்' மாநாடு எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 06

'இந்து சமுத்திரம் – எமது எதிர்காலத்தை வரையறுத்தல்' மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் தலைமையில் எதிர்வரும் 11 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஹர் டி சில்வா தெரிவித் துள்ளார்.

அலரிமாளிகையில் எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த மாநாடானது போதைப்பொருள் மற்றும் குற்றம் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் ஒத்துழைப் புடன் பிரதமர் அலுவலகம் , வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் லஷ்மன் கதிர்காமர் நிறுவகம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பான செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த நூற்றாண்டில் உலகின் பணிமிகுதியானதும் நெருக்கடியான வணிக தாழ்வாரங்களில் ஒன்றாக இந்து சமுத்திரம் வளர்ச்சியடைந்துள்ளது. உலகின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் கப்பல் சரக்குகளையும் ஏற்றிச்செல்வதன் வாயிலாக இது மிகவும் நெருக்கடியான கடல் வழிக்கான தொடர்பாடலுக்கு அனுசரணையளித்து உலகின் வணிகம் மற்றும் பொருளாததாரத்தின் வளர்ச்சியில் நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது.

விரைவாக மாற்றமடையும் ஒரு யுகத்தில் எதிர்பார்ப்புக்களை முகாமைத்துவம் செய்வதும் ஒழுங்கை உறுதிப்படுத்துவதும் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் செழிப்பை எய்திக்கொள்வதற்கான மையமாக அமையும் .

2018ஆம் ஆண்டுக்கான இந்து சமுத்திரம்: எமது எதிர்காலத்தை வரையறுத்தல் மாநாடானது சர்வதேச பிரமுகர்கள் மற்றும் கரையோரம் மற்றும் அதற்கு அப்பாலுள்ள நாடுகளின் நிபுணர்களைக்கொண்ட இரண்டு நாள் கருத்தரங்குகள் வாயிலாக பிராந்தியத்தின் உறுதியான சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை கண்டறியவுள்ளது.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் புவியியல் அமைவிடம் மற்றும் சர்வதேச சமூகத்துடனான சமாதானமான ஈடுபாட்டிலான எமது நீண்டகால வரலாறு ஆகியன குறித்த சர்வதேச மாநாட்டிற்கான முக்கியான மையமாக இலங்கையை மாற்றியுள்ளது.

இந்த மாநாடு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் ஒரு முயற்சியாவதுடன் அனைவருக்கும் நன்மையளிக்கக்கூடிய பரஸ்பர நலன்கள் மற்றும் கரிசனை மற்றும் புரிந்துணர்வின் ஊடாக செயற்படுதல் ஆகியவை தொடர்பான பிரச்சனைகளை இந்து சமுத்திரத்தின் கரையோர நாடுகளும் பாரிய கடல்வழி பாவனையாளர்களும் கலந் துரையாடிக்கொள்வதற்கு இது வழியமைப்பதாக உள்ளது.

இந்து சமுத்திரத்தின் பாரிய பொருளாதார செழுமையை மேம்படுத்துவதுடன் பாதுகாப்பான தொடர்புகள் வாயிலாக பங்களிப்புச்செய்வதற்கு இந்த மாநாட்டின் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன – என்றார்.

## குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 போராளிகளின் நினைவுத்தூபி அமைக்கும் பணி இடைநிறுத்தம்!



யாழ், தீருவில் பகுதியில் நிர்மாணிக்கப்பட இருந்த குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 போராளி களின் நினைவுத்தூபி அமைக்கும் பணிகளை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதையடுத்து இந்த நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை நகரசபையில் ஆளும் தரப்பினரால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த நினைவுத் தூபி நிர்மாணிக்கப்பட இருந்தது.

குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 போராளிகள் வீரச்சாவடைந்த தினமான நேற்று இந்தத் தூபியை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் பணிகள் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபை தலைவர் கருணாநந்தராசா ஆகியோர் தலைமையில் மேற்கொள்ளப்பட இருந்தன.

இந்த ஏற்பாடுகள் நேற்றுக் காலை இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை வல்வெட்டித்துறை நகரசபையின் எதிர்தரப்பு உறுப்பினர்கள் உள்ளிட்ட பத்திற்கும் அதிகமானவர்கள் அங்கு வந்து இதை இடைநிறுத்துமாறு கூறி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் மட்டும் நினைவுகூரப் பட்ட இப் பிரதேசத்தில் சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் சகல இயக்கங்களையும் நினைவுகூரும் வகையில் இந்த நினைவுத் தூபியை அமைக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர் எனத் தெரிவித்து தமது எதிர்ப்பை மேற்கொண்டமையுடன் ஏற்பாட்டாளர்களை அங்கிருந்து செல்லுமாறும் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இரு தரப்பினர்களுக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்ற நிலையில் அடிக்கல் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# அமெரிக்காவில் மர்ம நபர் துப்பாக்கி சூடு: 6 பொலிஸார் படுகாயம், ஒருவர் பலி!

வொஷிங்டன், ஒக். 06

அமெரிக்காவில் உள்ள தெற்கு கரோலினாவில் மர்ம நபர் ஒருவர் பொலிஸாரை நோக்கிச் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 6 பொலிஸார் படுகாயம் அடைந்தனர், ஒரு அதிகாரி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்து, சிறுவர்கள் முதல் வயதானவர்கள் வரை திடீர் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபடுவது அந்த நாட்டில் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் தெற்கு கரோலினா மாகாணத்தில் உள்ள புளோரன்ஸ் நகரில் உள்ள குடியிருப்பு ஒன்றுக்கு வழக்கு விசாரணை தொடர்பாக ஆணை வழங்கப் பொலிஸார் சென்றுள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக வீட்டிற்குள் இருந்தவாறு மர்ம நபர் ஒருவர் பொலிஸாரை




நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதில் குண்டு துளைத்து 3 பொலிஸார் முதலில் தரையில் வீழ்ந்தனர். பின்னர் அந்த மர்ம நபர், குழந்தைகள் சிலரை பிணைக் கைதிகளாக வீட்டிற்குள் பிடித்து வைத்து வைத்துக்கொண்டார். குழந்தைகளை மீட்க முயற்சித்த பொலிஸாரை நோக்கி மீண்டும் அந்த நபர் துப்பாக்கியால் சுட்டதில் மேலும், 4 பொலிஸார் படுகாயம் அடைந்தனர்.

சுமார் 2 மணி நேரம் நீடித்த இந்த துப்பாக்கிச்சூட்டின் இறுதியில் மர்ம நபரை சுற்றி வளைத்து பொலிஸார் கைது செய்தனர். எனினும் அந்த நபரை பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை. எதற்காக பொலிஸாரை நோக்கி அவர் துப்பாக்கிச்சூடு நடத்தினார் ? என்ற விவரமும் பொலிஸார் தரப்பில் வெளியிடப்படவில்லை.

இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்த 7 பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் 6 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

(கு)

## பாரிஸில் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த மாதத்தில் ஒருநாளில் கார்களுக்கு தடை!



பாரிஸ், ஒக். 06

காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தும் விதமாக பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மாதம் தோறும் முதல் ஞாயிறு அன்று கார்களை இயக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலேயே பிரான்ஸ் தலைநகர் பாரிஸில்தான் காற்று மிக அதிகமாக மாசுபட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை நகர நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மாதத்தின் முதல் ஞாயிற்று கிழமையில் முக்கிய பகுதிகளில் கார்களை இயக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இரு சக்கர வாகனங்கள், மிதி வண்டிகள் மற்றும் சாலையோர நடைபாதை ஆகியவற்றை அன்று ஒரு நாள் மட்டும் பொதுமக்களைப் பயன்படுத்தும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், டெலிவரி வாகனங்கள், மருத்துவ அவசர வாகனங்களுக்கு இந்த தடையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சூடான் விமான நிலையத்தில் இரு ராணுவ விமானங்கள் மோதல்!

சூடான் விமான நிலையத்தில் இரண்டு ராணுவ விமானங்கள் மோதி விபத்துக்குள்ளானதால் விமான சேவை பாதிக்கப்பட் டுள்ளது.

சூடான் நாட்டின் தலைநகர் சார்ட்டுமில் உள்ள பிரதான விமான நிலையத்தில் இருந்து ராணுவ போக்குவரத்து விமானங்கள் இயக்கப்படுகின்றன. அந்த வகையில் நேற்று முன்தினம் இரண்டு ராணுவ போக்குவரத்து விமானங்கள் இந்த விமான நிலையத்தில் தரையிறங்கும்போது ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

ஒரு விமானம் தரையிறங்கி ஓட்டப்பாதையில் வேகமாக சென்றபோது, அதன் வால் பகுதியில் மற்றொரு விமானம் மோதியது. இதில் இரண்டு விமானங்களும் கடுமையாக சேதம் அடைந்தன.

இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. ஆனால், 8 பேர் காயமடைந்துள்ளனர் என உள்ளூர் இணையதளத்தில் செய்தி வெளியா கியுள்ளது.



விமானங்கள் மோதி விபத்துக்குள்ளானமையை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையம் மூடப்பட்டது. சர்வதேச விமானங்கள் போர்ட் சூடான் விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டன. இந்த விபத்து தொடர்பான வீடியோ சமூக வலைத்தளத்தில் வெளியாகி உள்ளது.

## வருமானவரி செலுத்தாத பிரபல சீன நடிகை கைது!

அரசுக்கு உரிய வருமான வரி செலுத்தாமல் மோசடி செய்து வந்த சீன நடிகையை பொலிஸார் கைது செய்து வருமான விவரம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரபல சீன நடிகை பேன் பிங்பாங் (வயது 37). இவர் சீனாவில் அதிகம் சம்பாதிக்கும் நடிகையாக இருக்கிறார். கடந்த 3 மாதங்களாக அவரைக் காணவில்லை. திடீரென மாயமானார்.

இதனால் சீன ரசிகர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. அவர்எங்கேபோனார்?என்ன ஆனார்? என்று தெரியவில்லை. இந்த செய்தி சர்வதேச ஊடகங்களிலும் வெளியானது.

இந்த நிலையில் நடிகை மாயமானவிவகாரத்தில்மௌனம் கலைந்தது. அவர் சீன அரசால் கைது செய்யப்பட்டு ஒரு ரகசிய இடத்தில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்தமை தெரியவந்தது.

அதிக தொகை சம்பளம் பெறும் இவர் அரசுக்கு உரிய வருமான வரி செலுத்தாமல் மோசடி செய்து வந்தார். எனவே அவரை கைது செய்த சீன அதிகாரிகள் வருமான விவரம் குறித்து விசாரித்தனர்.

இறுதியில் அவருக்கு 892 மில்லியன் யுவான் அதாவது 950 கோடி இந்திய ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவும் உத்தரவிட்டுள்ளனர்.

சீனாவில் வருமான வரி செலுத்தாதவர்கள் இது போன்று கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்படுவது வழக்கம். நடிகை பேன்பிங்பிங்தற்போது தான் இத்தகைய பிரச்சினையில் சிக்கியுள்ளார்.

### ரோஹிங்கியா விவகாரம்:

## ஆங் சான் சூ கீயின் கௌரவ குடியுரிமையை ரத்து செய்தது கனடா நாடாளுமன்றம்!



மியான்மர் நாட்டின் அரசு ஆலோசகரான ஆங் சான் சூ கீயின் கௌரவ குடியுரிமையை கனடா நாடாளுமன்றம் ரத்து செய்துள்ளது.

மியான்மர் நாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள ரக்கினே மாநிலத்தில் சிறுபான்மை ரோஹிங்கியா இன முஸ்லிம்கள் அதிக மாகவசித்துவருகின்றனர். மியான்மரில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

ராணுவத்தினர் தாக்குதலால் உயிருக்கு பயந்து ரோஹிங்கியா முஸ்லிம்கள் பங்களாதேஷுக்குத் தப்பிச் சென்றவண்ணம் உள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றின் வழியாக படகில் சென்ற பலர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்தனர்.

மியான்மரில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளின்மீது கடந்த 25.8.2017 அன்று ரோஹிங்கியா போராளிகள் தாக்குதல்நடத்தியமையைத்தொடர்ந்து அவர்களுக்கு எதிரான வேட்டை தீவிரமானது. இதைத்தொடர்ந்து, மியான்மரில் இருந்து சுமார் 7 லட்சம் ரோஹிங்கியா முஸ்லிம்கள்வெளியேறி அண்டைநாடான பங்களாதேஷில் அகதிகளாக தஞ்சம் அடைந்தனர்.

இது, திட்டமிட்ட இனப்படுகொலை என ஐ.நா. அறிவித்தது.

இந்நிலையில், ரோஹிங்கியா விவகாரத்தில் தலையிட தவறிய காரணத்துக்காக மியான்மர் நாட்டின் அரசு ஆலோசகரான ஆங் சான் சூ கீ யின் கௌரவ குடியுரிமையை கனடா நாடாளுமன்றம் கடந்த புதன் கிழமை ரத்து செய்தது.

இது தொடர்பாக, கடந்த 2007 ஆம் ஆண்டு கனடா அளித்த கௌரவ குடியுரிமையை பறிக்க வகைசெய்யும் தீர்மானம் கடந்த சில தினங்களுக்கு முன் கனடா நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்தே ஆங் சான் சூ கீ யின் கௌரவ குடியுரிமையை கனடா நாடாளுமன்றம் ரத்து செய்துள்ளது.

ரோஹிங்கியா இன மக்களை திட்டமிட்டு மியான்மர் ராணுவம் கொன்று குவித்ததும், நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களை தீவைத்து கொளுத்தியதும் இன அழிப்பு மற்றும் ரோஹிங்கியா இனப் பெண்களை ராணுவம் குழு கூட்டுப் பலாத்காரம் செய்ததும், ஐ.நா. உண்மை அறியும் குழுவின் விசாரணையில் தெரிய வந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட து என கூறப்படுகிறது.

இப்படிஒருகௌரவகுடியுரிமையை ரத்து செய்வது கனடா வரலாற்றில் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடன் பேச அமெ. உதவியை நாடிய பாக். முயற்சி தோல்வியில்!




இந்தியாவுடன் பேச்சு நடத்த உதவி செய்யுமாறு அமெரிக்காவிடம் பாகிஸ்தான் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானின் புதிய பிரதமராக பொறுப்பேற்ற இம்ரான் கான், இந்தியாவுடன் பேச்சு நடத்த விரும்புகிறேன் எனப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார். இதனை அடுத்து, பாகிஸ்தானின் கோரிக்கையை ஏற்ற இந்தியா, அமெரிக்காவில் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேச ஒத்துக்கொண்டது.

ஆனால், அதற்கு அடுத்த நாளே காஷ்மீரில் மூன்று பொலிஸார் பயங்கரவாதிகளால் கடத்திக் கொல்லப்பட்டனர். இதனால், பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தக் கூடாது எனப் பல தரப்புகளில் இருந்து மத்திய அரசுக்கு அழுத்தம் அதிகரித்தது.

இதனால், பேச்சை இந்தியா ரத்து செய்தது. அது, பாகிஸ்தானுக்கு சற்றே அதிர்ச்சியை அளித்தது.

இந்நிலையில், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷி சமீபத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பாம்பியோ மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன் ஆகியோரை சந்தித்து பேசினார். அப்போது, அமெரிக்கா – பாகிஸ்தான் இடையே உள்ள பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

பேச்சின் போது, இந்தியாவுடன் சமரசம் செய்து வைத்து மீண்டும் பேச்சை தொடங்க உதவ வேண்டும் என குரேஷி கோரிக்கை விடுத்தார் எனக் கூறப்படுகிறது. ஆனால், குரேஷியின் இந்தக் கோரிக்கையை அமெரிக்கா மறுத்து விட்டது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே, இந்தியா – பாகிஸ்தான் பிரச்சனையில் மூன்றாம் நாடுகள் தலையீடு தேவையில்லை என இந்தியா பல முறை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(கு)

# இந்திய கோடீஸ்வரர்கள் பட்டியலில் தொடர்ந்தும் முகேஷ் அம்பானி முதலிடம்!



போர்பஸ் பத்திரிகை வெளியிட்ட இந்திய கோடீஸ்வரர்கள் பட்டியலில் ரிலையன்ஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி தொடர்ந்து 11 ஆவது ஆண்டாக முதலிடத்தை பிடித்துள்ளார்.

பிரபல போர்பஸ் பத்திரிகை இந்தியாவின் பெரும் பணக்காரர்கள் பட்டியலை ஒவ்வொரு வருடமும் அறிவிக்கும். இந்த ஆண்டிலும் இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரர் பட்டியலில் ரிலையன்ஸ் குழுமத் தலைவர் முகேஷ் அம்பானி முதலிடத்தை பிடித்துள்ளார்.

அம்பானியின் சொத்து மதிப்புகள் சுமார் 47.3 பில்லியன் டொலர்கள் ஆகும். இந்த வருடம் மட்டும் அவரின் சொத்து மதிப்பு சுமார் 9.3 பில்லியன் டொலர்கள் அதிகரித்திருக்கிறது.

விப்ரோ தலைவர் அஸிம் பிரேம்ஜி இந்த ஆண்டும் இரண்டாம் இடத்தில் உள்ளார். அவரின் சொத்து மதிப்பு சுமார் 21 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். அர்செலோர் மித்தல் குழுமத்தின் தலைவர் லக்ஷ்மி மித்தல் 18.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து மதிப்புடன் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இவர்களைத் தொடர்ந்து ஹிந்துஜா சகோதரர்கள், பல்லோஜி மிஸ்ட்ரி, தமிழகத்தை சேர்ந்த ஷிவ் நாடார், கோத்ரேஜ் குழுமம், திலீப் சங்வி, குமார் பிர்லா மற்றும் கௌதம் அதானி உள்ளனர்.

100 பேர் கொண்ட பட்டியலில் 4 பெண்கள் மட்டுமே இந்த ஆண்டில் இடம் பெற்றுள்ளனர். பயோடெக்னாலஜி துறையில் புகழ்பெற்று விளங்கும் கிரண் மஜும்தர் ஷா இப்பட்டியலில் 39 ஆம் இடம் பிடித்துள்ளார்.

# ரஷ்யாவிடம் ஆயுதம் வாங்கினால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும்!

## இந்தியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

இந்தியா – ரஷ்யா இடையே S – 400 ஏவுகணைக்கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ள நிலையில் இந்தியாவை மிரட்டும் தொனியில் நட்பு நாடுகளுக்கு அமெரிக்கா பொருளாதார தடை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரஷிய அதிபர் விளாதிமிர் புடின், இரு நாள் பயணமாக இந்தியாவுக்கு நேற்று முன்தினம் சென்றார். இருநாட்டுத் தலைவர்கள் இடையே நடைபெறும் இந்திய – ரஷ்ய வருடாந்திர சந்திப்பில் பங்கேற்பதற்காக சென்ற அவர், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். இப்போது 19 ஆவது ஆண்டாக இரு நாட்டுத் தலைவர்கள் சந்திப்பு நடைபெற்றது.

புடினின் இந்தப் பயணத்தின்போது ரஷ்யாவிடம் இருந்து எஸ் – 400 விமான எதிர்ப்பு ஏவுகணைகள் வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் மதிப்பு இந்தியப் பணத்தில் 36,792 கோடி ரூபாவாகும். இந்த ஏவுகணை வாங்கப்பட்டால், சீன எல்லையில் இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பல மடங்கு வலுவடையும்.

இது ரஷ்யாவின் அதிநவீன ஏவுகணையாகும். 400 கி.மீ சுற்றளவில் எதிரி நாட்டு ஏவுகணைகளை வான் வெளியில் இடை மறித்து தாக்கக்கூடிய ஆற்றல் இந்த ஏவுகணைக்கு உள்ளது. இந்த ரக ஏவுகணைகளில் 5 வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

அவற்றில் இரண்டு பாகிஸ்தான் எல்லைகளிலும், இரண்டு சீன எல்லையிலும் நிலைநிறுத்தி, மீதம் உள்ள ஒன்றை தலைநகர் டில்லியில் நிலைநிறுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதனால் இந்தியப் பாதுகாப்புத்துறையின் வலிமை மேலும் வலுப்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

புடின் மற்றும் பிரதமர் மோடி சந்திப்பின் போது இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் வெளியுறவு கொள்கை ஆலோசகர் யூரி உசாகோவ் தெரிவித்தார்.

இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்களை கொள்முதல் செய்யும் நாடுகள் மீது பொருளாதார தடை விதிக்கப்படும் என அமெரிக்க உள்துறை அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மேலும், ரஷ்யாவிடம் S – 400 ஏவுகணைகளை வாங்கினாலும் இந்த தடை விதிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா ரஷ்யா இடையே விரைவில் S – 400 ஏவுகணைக்கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ள நிலையில் இந்தியாவை மிரட்டும் தொனியில் நட்பு நாடுகளுக்கு அமெரிக்கா இந்த எச்சரிக்கை விடுத்துள்ளதாக கருதப்படுகிறது.

ஏற்கெனவே, ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடையினால் அந்நாட்டிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும் என இந்தியாவிற்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த S – 400 ஏவுகணை ஒப்பந்தத்தை எதிர்த்து அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

# முதல்வராக ஆக வேண்டும் என்று விஜய் நினைப்பது உயர்ந்த சிந்தனை!

## திருநாவுக்கரசர் தெரிவிப்பு

நடிகர் விஜய் முதலமைச்சர் ஆக வேண்டும் என்று யோசிப்பது உயர்ந்த சிந்தனை எனத் தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் கூறியுள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

மகாத்மா காந்தியை கொன்ற கோட்சேவை புகழ்ந்து பாராட்டியவர்கள் இப்போது மகாத்மா காந்தியின் புகழ் பாடுகிறார்கள். இது மனமாறுதல் என்றால் வரவேற்கக்கூடியது. வாக்கு வாங்குவதற்கானதாக இது இருக்கக்கூடாது.

நடிகர் விஜய் முதலமைச்சராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை. ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம். அரசியலுக்கு வரலாம். கட்சி தொடங்கிவிட்டு எம்.எல்.ஏ., அமைச்சர் ஆவதை விட முதலமைச்சர் ஆக வேண்டும் என்று யோசிப்பது உயர்ந்த சிந்தனைதான். எல்லா நடிகர்களும் அரசியலுக்கு வரட்டும்.

ஆனால் மக்கள் அவர்களை எந்தக் கோணத்தில் பார்க்கிறார்கள், அவர்களின் கருத்துக்களை எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்பதுதான் முக்கியம். மக்களே எஜமானர்கள்.

காங்கிரஸில் நல்ல தலைவர்கள் இருக்கிறார்கள். ஜனநாயக நாட்டில் கருத்து சொல்ல எல்லோருக்கும் உரிமை உண்டு. எல்லா கருத்துக்களையும் எதிர்க்க வேண்டும், விமர்சிக்க வேண்டும் என்று அவசியம் இல்லை.

பிரதமர் மோடிக்கு மாற்றாக ராகுல் காந்தி திகழ்கிறார். நம் தேசத்தின் அர்ப்பணிப்பில் இருக்கும் ராகுல் காந்தி மோடியை வீழ்த்தி பிரதமராக வருவார்.

தமிழகத்தில் நடைபெறும் ஊழல் ஆட்சி மற்றும் மதவாத மத்திய அரசைக் கண்டித்து மக்களிடம் விளக்கப் பொதுக்கூட்டம் காங்கிரஸ் சார்பாக தமிழகத்தில் 234 தொகுதியிலும் நடத்தப்படும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாதியற்ற தமிழ்நாடு என்ற எண்ணத்தில் நடிகர்கள் அரசியலுக்கு வருகின்றனர்!

## பொன். ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

நாதியற்ற தமிழ்நாடு என்ற எண்ணத்தில் நடிகர்கள் அரசியலுக்கு வருகின்றனர் என பொன். ராதாகிருஷ்ணன் விமர்சித்துள்ளார். நடிகர்களில் ரஜினிகாந்துக்கு மட்டுமே மக்கள் செல்வாக்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் அங்கு தெரிவித்தவை வருமாறு –

ஹைட்ரோ கார்பன் திட்டத்தை தி.மு.க எதிர்ப்பது வேலையற்ற வேலை. இது குறித்துப் பேச தி.மு.க, காங்கிரஸ் கட்சிகளுக்கு அருகதை இல்லை. ஹைட்ரோ கார்பனை எதிர்ப்பவர்களுக்கு முகவரி இல்லை.

அனைவராலும் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் ஆக முடியாது. மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுள்ள ஒரே நடிகர் ரஜினிகாந்த். புறம்போக்கு நிலம் போல நாதியில்லாத நிலையில் தமிழ்நாடு உள்ளது என்கிற சிந்தனையுடன் நடிகர்கள் அரசியலுக்கு வரக் கூடாது.

நடிகர் விஜய்யை குற்றம் சொல்லமாட்டேன், முழுமையான அரசியலுக்கு அவர் வருவதில் தப்பு இல்லை. எல்லோரும் மோசம் என்று சொல்லக்கூடாது. இருப்பவர்கள் எல்லாம் முட்டாள் அல்லர். எல்லோரும் லஞ்சம் வாங்குவதில்லை. அந்த வார்த்தையை எப்படி சொல்ல முடியும்?

நான் லஞ்சம் வாங்க மாட்டேன் என்றால் மற்றவர்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்களா, என்ன? இன்று அவர் குறிப்பிட்டு சொல்லட்டும். தமிழ்நாட்டு அரசியல்வாதிகளில் யார், யார் லஞ்சம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லட்டும். முதல் பாராட்டு நான் போய் அவருக்கு மாலை போடுகிறேன்.

2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி 350 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று தனி பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சி அமைக்கும். – இவ்வாறு பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

## தீர்வில்லையேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வந்துள்ள பிரிட்டன் அமைச்சர் நேற்றுக் கொழும்பில் இரா. சம்பந்தனைச் சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

கடந்த அரசோடு ஒப்பிடுகையில் இந்த அரசின் செயற்பாடுகளில் மாற்றம் உள்ளது. ஆயினும் அது மாத்திரம் போதுமானதல்ல.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசு இரண்டு வருடகால அவகாசம் கோரியிருந்தது. அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் பாரிய தாமதம் நிலவுகிறது.

மேலும் மிக விரைவாகத் தீர்வு காணப்படவேண்டிய – படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பு, நீக்கப்படும் எனப் பல முறை அரசு வாக்குக் கொடுத்தும் இன்னமும் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம், அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, தாமதித்து நிறுவப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தைத் திறமையாகச் செயற்பட எத்தனித்தல் போன்ற – விடயங்கள் தாமதமின்றிச் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டியவை.

உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு இன்னமும் நிறுவப்படாமையும் கவனிக்கப்படவேண்டிய விடயம். உண்மையை மறைத்துவிடமுடியாது. உண்மைநிலைநாட்டப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. உண்மையைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு நிறுவப்படவேண்டும்.

தமிழ் மக்களின் நீண்ட கால அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையானது ஓர் அரசியல் யாப்பினூடாகத் தீர்வு காணப்படவேண்டிய ஒன்றாகும். இந்த விடயம் தொடர்பில் கடந்த 30 வருட காலமாகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் இனிமேலும் தாமதமின்றி முன்னெடுக்கப்படவேண்டும்.

நாம் பிளவுபடாத – பிரிக்கமுடியாத – ஒருமித்த இலங்கை நாட்டிற்குள் தீர்வொன்றினை எதிர்பார்க்கின்றோம். இந்தக் கோரிக்கைக்கு எமது மக்கள் தொடர்ச்சியாகத் தேர்தல்களிலே அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள். மக்களது இந்த ஜனநாயகத் தீர்ப்பு மதிப்பளிக்கப்படவேண்டிய ஒன்று.

நாங்கள் இந்த நாட்டில் சம உரிமையுள்ள பிரஜைகளாக சுயகௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ விரும்புகிறோம். மக்களுக்குத் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்படவேண்டும். எமது இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவதை நாம் விரும்பவில்லை. கடந்த கால யுத்தத்தின் நிமித்தம் அவர்கள் அநேக இழப்புகளைச் சந்தித்து விட்டார்கள்.

கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட முடியாது. அவர்கள் தவறவிடும் பட்சத்தில் ஆட்சியில் யார் இருந்தாலும் இந்த நாடு பின்னோக்கியே செல்லும். ஆகவே எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து நீண்ட காலப் பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் காண முன்வருவது அவசியம். அவ்வாறு இது தீர்க்கப்படாவிடில் இந்த நாடு மீண்டும் ஒரு வன்முறையை நோக்கி நகரும்.

அரசு இணைந்து முன்மொழிந்த ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானம் தொடர்பில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு அரசு பொறுப்புக்கூறவேண்டும். இந்தத் தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அரசு தனது மக்களுக்கு நீதியை செய்வதிலிருந்தும் விலகமுடியாது. இந்தத் தீர்மானமானது மாற்றமடையாமல் நிறைவேற்றப்படவேண்டும். சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு கடைப்பிடிக்கவேண்டும்.

புதிய அரசியல் யாப்பு உள்ளிட்ட விடயங்கள் சரியான முடிவை அடையும்வரை மிக நெருக்கமான சர்வதேசப் பங்களிப்பு அவசியம். அதனைத் தவிர்க்கமுடியாது – என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இங்கு கருத்து தெரிவிக்கையில் –

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் அரச தலைவர்கள் மத்தியில் அரசியல் விருப்பு குறைவாகக் காணப்படுகின்றது. அநேக விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டபோதிலும் இன்னும் ஒரு தயக்க நிலை அரச தலைவர்கள் மத்தியில் காணப்படுகிறது – என்றார்.

சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ)

## அதிகாரத்தையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படும் வனரோபா தேசிய நிகழ்ச்சித் திட்டம் நேற்று மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இவ்வாறான சுற்றாடல் மாநாடுகளை நாட்டின் பல மாவட்டங்களிலும் நடத்தி வருகின்றோம். அதேபோன்று போதைவஸ்துக்கு எதிரான மாநாடுகளையும் பல மாவட்டங்களிலும் நடத்தி இருக்கின்றோம். சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பான பல மாநாடுகளையும் நடத்தி இருக்கிறோம்.

அந்த அனைத்து வேலைத் திட்டங்களும் ஜனாதிபதி செயலகத்தினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நான் சுற்றாடல் அமைச்சைப் பொறுப்பேற்றுக்கொண்டமை குறித்து பலரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

எனக்கு முன் இருந்த ஜனாதிபதிகள் அனைவருமே முதல் முதலாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபோது நிதி அமைச்சையே தெரிவு செய்து கொண்டனர்.

ஆனால் நான் நிதி அமைச்சை ஏற்றுக்கொள்ளவில்லை. எனக்கு முன்னால் இருந்த ஜனாதிபதிகள் அனைவரும் அதிசொகுசு வாழ்கையை வாழ்ந்தனர். ஆனால் நான் அதிகாரங்களையும், பணத்தையும் துறந்த ஒரே மக்கள் சேவகனாகவே இருக்கின்றேன்.

எனக்குப் பணம் தேவையில்லாத காரணத்தினாலேயேதான் நான் நிதி அமைச்சைக்கூடப் பெற்றுக்கொள்ளவில்லை. இன்னும் ஒரு வருடத்துக்குப் பிறகு தெரிவு செய்யப்படுகின்ற ஜனாதிபதிக்கு எனக்கு இருக்கும் அதிகாரங்கள் கூட இருக்கப் போவதில்லை – என்றார்.

இந் நிகழ்வில் அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, மஹிந்த அமரவீர, றிஷாட் பதியுதீன், இராஜாங்க அமைச்சர்கள் ஸ்ரீயானி விஜேவிக்ரம, வீரகுமார திசாநாயக்க, பிரதியமைச்சர்கள் அங்கஜன் ராமநாதன், காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் உள்ளிட்ட பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க, மன்னார் மாவட்ட செயலாளர் சி.ஏ.மோகன்ராஸ் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பாதுகாப்புத்துறை பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதேநேரம், 2018 தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மன்னார் மடு வீதி, தம்பனைக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்றது. (ஐ)

## அரசியல் கைதிகளென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

அவர்கள் தொடர்பில் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்துரையாடித் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

கண்டி நீதிமன்றில் நேற்றுச் சட்டத்தரணிகள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் போராட்டத்தில் ஈடுபடுகின்றமை தொடர்பாகச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இந்த நாட்டில் அரசியல் கைதிகள் இல்லை. அரசியல் கைதிகள் இருப்பதாக யார் கூறுகின்றனர்? சிறைச்சாலைகளில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள். 2009 ஆம் ஆண்டில் இருந்து இருப்பவர்களும் சிறையில் இருக்கின்றனர். அவர்களது வழக்குகள் இடம்பெற்று வருகின்றன – என்றார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரியும் அதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவரும் அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் முல்லைத்தீவில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வன்னிக்குறோஸ் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் தவராஜா, பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

அத்தோடு நியூ மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான நடேஷ் குகநாதனின் மகள், மனைவி உள்ளிட்டவர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'எங்கள் உறவுகளுக்கு நீதி வேண்டும்', 'நல்லாட்சி அரசே சிறையில் இருக்கும் உறவுகளை விடுதலை செய்', 'எங்கள் அரசியல் கைதிகளுக்கு உடன் நீதி வழங்கு', 'அரசியல் கைதிகளின் விடுதலையை அரசே விரைவு படுத்து', 'அரசே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்', 'அரசியல் கைதிகளுக்கு மன்னிப்புவழங்கு' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியிருந்தனர். (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்துச் சாதனை படைத்துள்ளனர்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவனான மனோகரன் திகழொளி பவன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் நவாஸ்கன் நதி ஆகியோரே புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும் தமிழ் மொழி மூலம் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, தேசிய ரீதியில் 199 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை பிலியந்தலை சோமவீர சந்திரசிறி வித்தியாலய மாணவன் புமித் மெத்னல் விதானகே, வியாங்கொட சென். மேரிஸ் மகா வித்தியாலய மாணவி குருகுலசூரிய சனுபா திமத் பெரேரா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வவுனியா சிவபுரம் ஆரம்பப் பாடசாலை மாணவி ஹர்திக் ஜன்சுஜா 197 புள்ளிகளைப் பெற்றுத் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவி சாருகா சிவனேஸ்வரன் 196 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றனர்.

மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் விசேட அக்கறையுடன் தமக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் திகழொளிபவன், எதிர்காலத்தில் ஒரு மருத்துவராகி மக்களுக்குச் சேவையாற்ற விரும்புகிறார் எனவும் குறிப்பிட்டார்.

மாணவனின் பெறுபேறுகள் தொடர்பில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை அதிபரான மகேந்திரராஜா மற்றும் மாணவனின் வகுப்பாசிரியர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

மீசாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான நவாஸ்கன் நதி எதிர்காலத்தில் தான் ஒரு மருத்துவ நிபுணர் ஆக விரும்புகிறார் எனக் குறிப்பிட்டமையுடன் தமது பெற்றோர், அதிபர், ஆசிரியர் ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவித்தார். (ஐ–7)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் அரசியல், பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடி உருவாகியுள்ள நிலையில், அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் சம்பந்தமாக ஆராய்வதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்திருந்தார்.

இதன்படி ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா, எஸ்.பி. திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த உள்ளிட்டவர்கள் இக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடிய பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஏதேனுமொரு வழியில் பதவிநீக்கம் செய்துவிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தலைமையிலான ஆட்சி அமைக்க வேண்டும் என்ற யோசனையை அதாவுல்லா முன்வைத்தார். அதை சுசில் பிரேமஜயந்த வழிமொழிந்துள்ளார்.

வரவு – செலவுத்திட்ட காலப் பகுதியென்பது அரசியல் ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்தது என்பதால் ஜனாதிபதி விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என தினேஷ் குணவர்தன குறிப்பிட்டார்.

இதையடுத்து மேற்படி யோசனையின் அடுத்தக்கட்ட நகர்வுகள் சம்பந்தமாக ஆராய்வதற்கு ஐவர் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது. ஆறுமுகன் தொண்டமான், அதாவுல்லா, சுசில் பிரேமஜயந்த உள்ளிட்டவர்கள் குழுவில் இடம்பிடித்துள்ளனர்.

அடுத்தவாரமளவில் இந்தக் குழுவுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அதேவேளை, கூட்டரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முழுமையாக வெளியேறினால் மாற்று அரசொன்றை அமைப்பதற்குத் தானும் ஒத்துழைப்பு வழங்குவார் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேற்று அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அங்கொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரி வீதி அருகே நின்றுகொண்டிருந்தவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவரின் சடலம் முல்லேரியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இராஜகிரிய, களபளுவாவ பகுதியைச் சேர்ந்த 33 வயதான தாரக இரோசன பெரேரா என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய நிகழ்ச்சித் திட்டமும் சுற்றாடல் மாநாடும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று மன்னாரில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் யுத்தம் நடைபெற்றது. அந்த யுத்தத்திலே தமிழ் மக்களுக்காக, எங்கள் இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் ஆயுதப் போராட்டத்துக்கு உதவி செய்தார்கள் என்ற காரணத்தால் இலங்கைச் சிறைகளில் தமிழ் இளைஞர்கள் அரசியல் கைதிகளாக இருக்கின்றனர்.

அரசியல் கைதிகளாகத் தற்போது 107 பேர் இருக்கின்றார்கள். அதில் 52 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் தண்டனை அளித்தவர்களாக 55 பேர் இருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்காக, அவர்களுடைய உரிமைக்காக, உரிமைகள் கிடைக்கவேண்டும் என்ற சிந்தனையில்தான் ஆயுதப் போராட்டத்துக்கு ஒரு சிலர் உதவி செய்தனர். அவர்கள் அதற்குரிய வகையில் பத்து வருடத்திற்கு மேல் சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

அவர்கள் கேட்பது ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடமோ தங்களுக்குப் புனர்வாழ்வளித்து விடுதலைசெய்யவேண்டும் என்பதே. தாங்கள் தங்கள் குடும்பங்களோடு இணைய வேண்டும் என்று கோரிக்கை வைத்து அவர்கள் தற்போது சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

எனவே இந்த நிகழ்வில் அவர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்வது அனைத்து அரசியல் கைதிகளுக்கும் புனர்வாழ்வளித்து விடுதலை செய்ய வேண்டும் என்பதே. – என்றார்.



# ரொனால்டோ மீது பாலியல் புகார்: விசாரணைகள் மீண்டும் ஆரம்பம்

உதைபந்து உலகில் புகழ் பூத்த வீரரான போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, அமெரிக்கப் பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என முன்வைக்கப்பட்டுள்ள புகார் தொடர்பில், அமெரிக்கப் பொலிஸார் விசாரணைகளை தொடங்கியுள்ளனர்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ, கடந்த 2009ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள, லாஸ்வேகாஸ் விடுதியில் வைத்து அந்நாட்டு பெண்ணான கேத்ரின் மயோர்கா என்ற 25 வயதுப் பெண்மணியை, பலவந்தமாக பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக அந்தப் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, அந்தப் பெண், அப்பத்திரிகைக்கு அளித்துள்ள நேர்காணலில், பலமுறை தாம் மறுப்பு தெரிவித்தும் ரொனால்டோ பலவந்தமாகத்தன்னுடன் உறவு வைத்துக் கொண்டார் எனக் குறிப்பிட்டார்.

அது மட்டுமின்றி இந்தத் தகவல்களை வெளியிடாமல் இருக்கப் பெருந்தொகையான பணம் தருவதாகவும் வாக்குறுதி அளித்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமின்றி ரொனால்டோவுடன் எடுத்த புகைப்படங்களையும் கேத்ரின் மயோர்கா வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக அமெரிக்கப் பொலிஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில், ரொனால்டோவும், அந்த இளம்பெண்ணும் இந்தப் பிரச்சினையை நீதிமன்றத்துக்கு வெளியே சுமுகமாகப் பேச்சு மூலம் முடித்துக்கொள்வது எனக் கடந்த 2010ஆம் ஆண்டு முடிவு செய்தனர்.

இதற்காக அந்த பெண்ணுக்கு, ரொனால்டோ 3,75,000 டொலர்கள் இழப்பீடு வழங்குவது என ஒப்பந்தம் போடப்பட்டது.


ஆனால் இந்தப் பிரச்சினை தற்போது மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. ரொனால்டோ மீதான பாலியல் புகாரை நீதிமன்றத்துக்கு வெளியே தீர்த்துக்கொள்வது எனப் போடப்பட்ட ஒப்பந்தம் செல்லாது என அறிவிக்கக் கோரி, அந்த பெண்ணின் சட்டத்தரணிகள் வழக்கு தொடர்ந்து உள்ளனர்.

இதைத்தொடர்ந்து ரொனால்டோ மீதான பாலியல் புகார் மீது அமெரிக்கப் பொலிஸார், மீண்டும் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

எனினும், இச்சம்பவம் குறித்து பதிலளித்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, 'எனது பெயரைப் பயன்படுத்தி புகழ்தேட அவர் முயற்சியை மேற்கொள்கிறார். இது வெறும் மோசடி. உண்மைக்குப் புறம்பானது. எனது இத்தனை ஆண்டு காலகட்டத்தில் பல்வேறு தடவை இதுபோன்ற புகார்களில் சிக்கவைக்கப்பட்டேன். ஆனால் அவை யாவும் உண்மை இல்லை என்பது காலம் நிரூபித்தது. அதுபோன்றே அமெரிக்க இளம்பெண் எழுப்பியுள்ள குற்றச்சாட்டும்' என கூறினார்.

இதேவேளை. இத்தகைய செய்தி வெளியிட்ட பத்திரிகை மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரொனால்டோவின் சட்டத்தரணி கிறிஸ்டியன் ஸ்கொர்ட்ஸ் கூறியுள்ளார். மேலும், பத்திரிகையின் இந்தச் செய்தி தனிமனித சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இதற்காக ஊடகவியலாளர்களிடம் இருந்து தனது கட்சிக்காரருக்குச் சட்ட ரீதியாக நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உலக விளையாட்டு வீரர்களில் மிகவும் புகழ் பெற்ற வீரராக ரொனால்டோ விளங்குவதுடன், இவர் ஐந்து முறை உலகின் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# லிவர்பூலை வென்றது நாப்போலி

ஐரோப்பிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலுடனான குழு சி போட்டியின் இறுதி நிமிடங்களில் தமது அணித்தலைவர் லொரென்ஸோ இன்சீனியா பெற்ற கோலோடு 1-0 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலி வென்றது.

இந்நிலையில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென் ஹொட்ஸ்பர் அணியின் மைதானத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற அவ்வணியுடனான குழு பி போட்டியொன்றில் 4-2 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வென்றது. பார்சிலோனா சார்பாக, லியனல் மெஸ்ஸி இரண்டு கோல்களையும் பிலிப் கோச்சினியோ, இவான் றகிட்டிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சார்பாக, ஹரி கேன், எரிக் லமெலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான மொனாக்கோவுடனான குழு ஏ போட்டியொன்றில் 3-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் வென்றது. பொரூசியா டொட்டமுண்ட் சார்பாக, ஜேக்கப் புரூன் லார்சன், பக்கோ அல்கேஸர், மார்கோ றொய்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# முன்னணி அணிகள் இன்று மோதல்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூறாவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று இரவு 07.00 மணிக்கு அரியாலை பயிற்சித் திடல் மைதானத்தில் நடைபெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கிரந்தன் தலைமையிலான கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து கஜகோபன் தலைமையிலான ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

இரு மாவட்ட அணிகள் மோதுவதாலும் மற்றும் இரு அணிகளிலும் முன்னணி வீரர்கள் இடம்பிடித்து இருப்பதாலும் இப்போட்டி விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை இழந்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



# இலங்கை பெண்கள் கூடைப்பந்து அணி பயிற்றுவிப்பாளரின் பதவி காலம் நீடிப்பு

இலங்கை பெண்கள் கூடைப்பந்து அணியின் பயிற்றுவிப்பாளரின் பதவி காலத்தை எதிர்வரும் 2019 ஆம் ஆண்டுவரை விளையாட்டுத்துறை அமைச்சு நீடித்துள்ளது.

இலங்கை பெண்கள் கூடைப்பந்து அணியின் பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டு வரும் திலகா ஜினதாஸ எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக்கிண்ணக் கூடைப்பந்து தொடர் வரை அந்த அணியின் பயிற்றுவிப்பாளராகச் செயற்படுவார் என விளையாட்டுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசியல் கைதிகளுக்கு விடுதலை கோரி மட்டக்களப்பிலும் நேற்றுப் போராட்டம்





மட்டக்களப்பு, ஒக். 06

தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரி மட்டக்களப்பு நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று வெள்ளிக் கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

முற்போக்கு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இந்தக் கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மணிக்கூண்டு கோபுரத்தில் இருந்து பஸ் நிலையம் வரையில் கவனவீர்ப்புப் பேரணி நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மற்றும் பிரதேச சபையின் தவிசாளர்கள், பிரதேச சபை,மாநகர சபை உறுப்பினர்கள், இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பெருமளவான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது சிறைக்கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தமையுடன் சிறைக்கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்கவேண்டும் என்று கோஷங்களையும் எழுப்பினர். (ஐ)

## மதுபானச் சாலையை மூடக்கோரி பருத்தித்துறையில் மக்கள் பேரணி



பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள மதுபானச்சாலையை அகற்றுமாறு கோரி மாபெரும் கவன வீர்ப்புப் பேரணி ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

16 பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் பேரணி பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதேச செயலகம் வரை சென்று ஜனாதிபதிக்கான மகஜரொன்றும் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரில் மதுபானச் சாலை அமைந்திருப்பதால் பொது மக்களுக்குப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன என இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

போராட்டம் நடைபெற்றபோது நகர வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுப் போராட்டத்துக்கு வர்த்தகர்கள் ஆதரவை வழங்கினர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் உள்ளிட்ட ஆளும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

## குருந்தூர் மலையில் பொங்கல் வழிபாடு



முல்லைத்தீவு, ஒக். 06

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் நேற்றுப் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றன.

குமுழமுனைப்பகுதி இளைஞர்கள் ஒன்றுகூடி பொங்கல் பொங்கி, பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். இந்த வழிபாட்டில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்துகொண்டார்.

இந்த மலைப்பகுதியில் புத்தர் சிலை ஒன்றை வைப்பதற்காக இரண்டு பௌத்த துறவிகள் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் சென்றதால் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

இது தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்றது. இந்த ஆலயத்தில் மக்கள் வழிபாடுகளில் தொடர்ந்து ஈடுபட நீதிமன்று அனுமதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூல் – மணிவண்ணன் வழக்கு இணக்க சபைக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 06

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன் கூலை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரான சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கை இணக்க சபைக்கு மாற்றி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இணக்க சபையில் முறைப்பாட்டாளரும் எதிரியும் இணக்கப்பாட்டுக்கு வராவிடின் வழக்கை எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி விளக்கத்துக்கு நியமிப்பதாகவும் நீதிமன்று கட்டளை வழங்கியது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன் கூலை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரான சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை 486ஆம் பிரிவின் கீழ் ஆள் ஒருவரை அச்சுறுத்தினார் எனச் சட்டத்தரணி மணிவண்ணனுக்கு எதிராகப் பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. முறைப்பாட்டாளர் மன்றில் தோன்றினார்.

எதிராளியான சட்டத்தரணி வி.மணிவண்ணன் மன்றில் முன்னிலையானார். அவர் சார்பில் சட்டத்தரணி கு.குருபரன் முற்பட்டார்.

### இணக்கப்பாடு இல்லையேல் விசாரணை நவம்பரில் ஆரம்பம்

பொலிஸாரால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் முறைப்பாட்டாளரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் மற்றும் எதிரியான சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோரை இணக்க சபைக்குச் சென்று இணக்கப்பாட்டுச் செல்வது தொடர்பில் ஆலோசிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

இரு தரப்பும் இணக்கப்பாட்டு வராவிடின் வழக்கை வரும் நவம்பர் 14ஆம் திகதிக்கு விளக்கத்துக்கு நியமிப்பதாக நீதிவான் கட்டளையிட்டார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பரப்புரையின்போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியப் பேரவை என்ற தேர்தல் கூட்டில் போட்டியிட்டது.

அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கை கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் வெளியிடப்பட்டது. தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வைத்த பின் உரையாற்றிய தமிழ் தேசியப் பேரவையின் யாழ். மாநகர சபைக்கான முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சார்பாக பல்வேறு கட்டுரைகளை எழுதிய ஒருவரைத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் அதிகாரி ஆக்கியிருக்கின்றார்கள். இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவில் அதிகாரியான ரட்ணஜீவன் எச். ஹூலிற்கு அரசால் வழங்கப்பட்டிருக்கின்ற பணி எம்மை நீதிமன்றங்களில் நிறுத்துவதே என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

தன் மீதான அவதூறு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் சாமுவேல் இரட்ணஜீவன் கூல், யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

சட்டத்தரணி வி.மணிவண்ணன் தன் மீது அவதூறாகப் பேசிய விடயத்தை தான் ஊடகங்கள் வாயிலாக அறிந்தார் எனவும், அது தொடர்பில் உரிய விசாரணைவேண்டும் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் அவர் கேட்டிருந்தார்.

அத்துடன், அந்தக் காலப் பகுதியில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலும் தன்னை அச்சுறுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்தார் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் கூல் பொலிஸில் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தேர்தலுக்குப் பொறுப்பாக இயங்கும் பிரிவுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கட்டளை வழங்கியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்டவர்களிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றிருந்தனர். (ஐ-7)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.